விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 113 வள்ளுவர் ஆண்டு 2056 பங்குனி 28 வெள்ளிக்கிழமை (11.04.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

35 வருடங்களுக்குப் பின்னர்

## பலாலி வீதி முழுமையாக விடுவிப்பு

- காலை 6 மணியிலிருந்து மாலை 5 மணிவரையே பயணிக்கலாம்.
- வாகனத்தை நிறுத்த, பயண நேரத்தில் புகைப்படம், காணொளி எடுக்கத் தடை.
- 40 கிலோ மீற்றர் வேகத்தில் மாத்திரமே பயணிக்க முடியும்.

(15ஆம் பக்கம் பார்க்க)



அச்சுவேலி நவக்கிரியில்

## சித்த மருத்துவமனைக்கு சொந்தமான 2 ஏக்கர் காணி

இராணுவத்தால் மீளக் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் அச்சுவேலி நவக்கிரி சித்த மருத்துவ மனைக்குச் சொந்தமான 02 ஏக்கர் காணியை இராணுவத்தினர் 15

## அச்சுவேலி பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின்

8 பரப்புக் காணி இராணுவத்தால் விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் அச்சுவேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தின் தலைமைக் காரியாலய கட்டடம் மற்றும் அதனைச் சூழவிருந்த 15

யாழ்ப்பாணத்துக்கு

## பிரதமர் ஹரிணி இன்று விஜயம்

(யாழ்ப்பாணம்)
பிரதமர் ஹரிணி அமரசூரிய இன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளார்.
காரைநகர், வேலணை, கோப்பாய், பருத்தித்துறை பிரதேசங்களில் மக்கள் சந்திப்பிலும் ஈடுபடவுள்ளார்.(ம-7,4)

பட்டலந்த அறிக்கை தொடர்பாக

# ரணிலுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

பாராளுமன்றத்தில் அமைச்சர் பிமல் ரத்நாயக்க



(கொழும்பு) பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உட்பட பொறுப்பானவர்களுக்கு எதிராக சர்வதேச ஆதரவைப் பெற்றேனும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

(04ஆம் பக்கம் பார்க்க)

## 24 மணி நேர கடவுச்சீட்டு விநியோகம்

தற்காலிகமாக நிறுத்தம்

(கொழும்பு)
ஒருநாள் சேவையில் கடவுச்சீட்டு பெற்றுக் கொள்வதற்காக 24 மணி நேர சேவை எதிர்வரும் 15

## பலாலி வீதியூடாக முழுமையான பேருந்து சேவை

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் பலாலி வீதி முழுமையாக நேற்று வியாழக்கிழமை திறக்கப்பட்டதை அடுத்து, பலாலி - யாழ்ப்பாணம் வழித்தடப் பேருந்து சேவைகள் முழுமையாக இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
இதுவரை காலமும் யாழ்ப்பாணத்தில் இருந்து பயணிக்கும் குறித்த வழித்தடப் பேருந்துகள் வசாவிளான் சந்தியில் அமைந் 15

## 35 வேட்புமனுக்களை ஏற்றுக் கொள்க

மேல்முறையீட்டு நீதிமன்றம் தேர்தல் அதிகாரிகளுக்கு உத்தரவு

(கொழும்பு)
நிராகரிக்கப்பட்ட 35 வேட்புமனுக்களை மீண்டும் ஏற்றுக் கொள்ளுமாறு மேல் முறையீட்டு நீதிமன்றம் தேர்தல் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளது.
உள்ளூராட்சித் தேர்தலில் நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்கள் தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் 15

## மாவைக் கந்தனுக்கு இன்று கும்பாபிஷேகம்

(மாவிட்டபுரம்)
சோழ இளவரசி மாருதபுரவீகவல்லி போற்றித் துதித்துய்த்த வரலாற்றுச் சிறப்புமிகு யாழ்ப்பாணம் மாவையூர் ஸ்ரீ கந்தசுவாமி கோவிலின் மகா கும்பாபிஷேகம் பங்குனி உத்திர நன் 04



## 22 இந்திய பிரஜைகள் கொழும்பில் கைது

(கொழும்பு)
கொழும்பு இராஜகிரியவில் 22 இந்தியப் பிரஜைகள் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர். 15

## மண்டைதீவில் சர்வதேச கிரிக்கெட் மைதானம்

விளையாட்டுத் துறை அமைச்சர் சுனில் குமார, சனத் ஜயசூரிய உள்ளிட்டோர் கள ஆய்வு



(06ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறாது நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## ஆழ்வாப்பிள்ளை ஆழிவேல்



வட்டக்கச்சி கிளிநொச்சியைப் பிறப்பிடமாகவும் வவுனியா பன்றிக்கெய்தகுளத்தை வசிப்பிட மாகவும் கொண்ட ஆழ்வாப்பிள்ளை ஆழிவேல் அவர்கள் 09.04.2025 புதன்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆழ்வாப்பிள்ளை - செல்வராணி தம்பதிகளின் பாசமிகு மகனும் சீவரத்தினம் புனிதவதி தம்பதிகளின் பாசமிகு மருமகனும் சிவபாக்கியம் அவர்களின் அன்புக் கணவரும் தமிழரசி(கோபி - லண்டன்), சரணிகா (நோர்வே), பிரவீனா(வவுனியா), ரிமோசாயன் (பன்றிக்கெய்தகுளம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிந்துகாசன்(லண்டன்), திவாகர் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் அதிதி(நோர்வே) அவர்களின் பாசமிகு பேரனும் மதனி(ஓய்வுநிலை ஆசிரியர், திருகோணமலை), செல்வரதி, கந்தவேல்(பொறியியலாளர் - கனடா), காலஞ்சென்ற சரவணபவா(டாக்டர்), பங்கையச்செல்வி(பேரவை செயலகம் - வடக்கு மாகாணம்) உதயச்செல்வி(விவசாய அமைச்சு - வடக்கு மாகாணம்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஜீவகரன்(பெரியமடு), சந்திரவதி (குளவிசுட்டான்), சிவரூபன்(பன்றிக்கெய்தகுளம்), ஜசிகரன் (பெரியமடு), சிந்துஜா(கோழியகுளம்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் இந்திரன் (ஓய்வு நிலை கிராம உத்தியோகத்தர் - கிளிநொச்சி), மகேந்திரன் (கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 11.04.2025 இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பன்றிக்கெய்தகுளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள் கின்றோம்.

**பன்றிக்கெய்தகுளம்,**
**ஓமந்தை,**
**வவுனியா.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(C-2662)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை உட்பட பல நாடுகளுக்கு வரிகளை இடைநிறுத்திய ட்ரம்ப்!

(வோஷிங்டன்)

**இலங்கை உட்பட பல நாடுகள் மீது அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்த வரிகள் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் 90 நாட்களுக்கு நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது.**



இருப்பினும் சீனாவிற்கு எதிரான வரிகள் 125% ஆக அதிகரிக்கப்பட்டுள்ளன.

சீன இறக்குமதிகள் மீது அமெரிக்கா முதல் 104% வரி விதித்துள்ளது.

இதற்கு பதிலளிக்கும் விதமாக, சீன நிதி அமைச்சகம் அமெரிக்க இறக்குமதிகளுக்கு 84% வரி விதிக்கப்போவதாக அறிவித்தது.

அதன்படி சீனாவின் முடிவுக்கு பதிலளிக்கும் விதமாக, அமெரிக்கா மீண்டும் ஒரு முறை வரி விகிதத்தை அதிகரித்துள்ளது. இதனைத் தொடர்ந்து தற்போது அமெரிக்கா சீன பொருட்களுக்கான வரியை 125 வீதமாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## மகிந்தவின் மனைவி மீது சி.ஐ.டியில் முறைப்பாடு

(கொழும்பு)

கம்பஹா பகுதியில் உள்ள ஒரு நிலத்தை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மனைவி ஷிரந்தி ராஜபக்ஷ சட்டவிரோதமாக பரிவர்த்தனை செய்தமை தொடர்பில் குற்றப் புலனாய்வுத் துறையில் முறைப்பாடு அளித்துள்ளதாக பிரதி அமைச்சர் மகிந்த ஜெயசிங்க தெரிவித்துள்ளார்.

ஷிரந்தி ராஜபக்ஷ குறித்த நிலத்தை வேறொருவருக்கு விற்றுவிட்டு பின்னர் அது ஒரு பௌத்த மையத்திற்கு நன்கொடையாக வழங்கியதாக மகிந்த ஜெயசிங்க கூறியுள்ளார்.

இந்நிலையில் இந்த மோசடி குறித்து விசாரணை நடத்தக் கோரி குற்றப் புலனாய்வுத் துறையில் முறைப்பாடு அளித்துள்ளதாகவும் பிரதி அமைச்சர் தெரிவித்துள்ளார். (நி-8)

## குற்றம் செய்தால் தப்பிக்க முடியாது என்பதை மக்கள் நம்ப வேண்டும்!

### ஜனாதிபதி சுட்டிக்காட்டு



(கொழும்பு)

**கையூட்டல் மற்றும் ஊழல் குற்றங்களிலிருந்து அரசியல் பொறிமுறையை மீட்டெடுக்க தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதால் அதிகாரிகளும் விரைவில் சரியான பாதைக்குத் திரும்ப வேண்டும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற "தேசிய ஊழல் எதிர்ப்பு செயற்றிட்டம் 2025-2029 வெளியீட்டு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் அரச நிறுவன கட்டமைப்பின் கௌரவம் மற்றும் பெறுமதிகளை அழித்து, கையூட்டல் மற்றும் ஊழல் ஆட்சி மேலோங்கியிருந்ததாகவும், தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த ஆறு மாதங்களில் அரச சேவையில் அவ்வாறான செயற்பாடுகளுக்கு இடமளிக்கவில்லை எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

ஊழலுக்கு எதிராகச் சட்டத்தை நடை முறைப்படுத்துவது அரசியல் பழிவாங்கல் அன்றி, மனிதாபிமானக் கடமை எனவும் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

சட்டத்தை மதிக்கும், சட்டத்திற்கு அஞ்சும் சமூகம் கட்டியெழுப்பப்பட வேண்டும். இதற்குக் கருத்தரங்குகளும், பயிற்சிப் பட்டறைகளும் மாத்திரம் போதாது எனவும் குற்ற மொன்றிற்குத் தண்டனை வழங்கப்படுமென நடை முறையில் உறுதி செய்ய வேண்டும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இலங்கைக்கு ஒரு வருடத்திற்கு முன்பாக சுதந்திரம் பெற்ற இந்தியா, தேசிய நிகழ்ச்சி நிரலுடன் முன்னேறியதன் பலனாக விண்வெளி மற்றும் மென்பொருள் துறைகளில் முன்னேறியது. இலங்கையின் அரசியல் அதிகார தரப்பினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களினால் 2022ஆம் ஆண்டில் இலங்கை வங்குரோத்து நாடாக மாறியது.

மக்களின் ஒவ்வொரு ரூபாய்க்கும் பொறுப்புக் கூறும் வகையிலான தேசிய நிகழ்ச்சி நிரலின் மூலம் இலங்கையை உலக நாடுகளுக்கு முன்பாக உயர்த்தி வைக்கும் பொறுப்பை தற்போதைய அரசாங்கம் நிறைவேற்றி வருகிறது.

அவ்வாறு செய்வதன் மூலம் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்கள் மீது மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்த முடியும் எனவும் குற்றத்தைச் செய்துவிட்டு சட்டத்திலிருந்து தப்பிக்க முடியாது என்பதைப் பொது மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டுமெனவும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (நி-8)

## மீண்டும் சிக்குன்குனியா தலைதூக்கும் ஆபத்து

### எச்சரிக்கும் சுகாதாரப் பிரிவு

(கொழும்பு)

"சிக்குன்குனியா" நோய் பரவும் அபாயம் இருப்பதால், அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக வைத்திய உதவியை நாடுமாறு சுகாதார அதிகாரிகள் பொதுமக்களுக்கு அறிவுறுத்துகின்றனர்.

தற்போது நுளம்புகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், நுளம்புகள் பெருகும் இடங்களை முடிந்தவரை அழிப்பதன் மூலம் சிக்குன்குனியா பரவுவதைக் கட்டுப்படுத்த முடியும் என வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது நாட்டில் 190 சிக்குன்குனியா நோயாளர்கள் பதிவாகியுள்ளனர், அவற்றில் 65 பேர் மருத்துவ ரீதியாக சிக்குன்குனியா நோயால் பாதிக்கப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மேல் மாகாணத்தில்தான் அதிக எண்ணிக்கையிலான நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இதேவேளை, இரத்தினபுரி வைத்தியசாலையில் ஊழியர்கள் 37 பேர் உள்ளடங்கலாக 87 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி, வைத்தியசாலை வளாகம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் சுத்தம் செய்யும் பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (நி-8)

## 15 ஆம் திகதி விடுமுறையில்லை

### அரசாங்க தகவல் திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் 15 ஆம் திகதி விடுமுறை தினம் என சமூக ஊடகங்களில் வெளியான செய்தி போலியானது என அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அரசாங்கம் அவ்வாறான ஒரு தீர்மானத்தை இதுவரை எடுக்கவில்லை என அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் அரசாங்கத் தகவல் திணைக்களம் ஊடக அறிவித்தல் ஒன்றையும் வெளியிட்டுள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சோழியபுரம் பத்ம வெளியீடு
# 'விசுவாவசு' வருஷமே வருக! வருக!! வருகவே!!!

**புத்தாண்டின் இனிய கணபதியே போற்றி!**

எக் கருமத்தை எவர் தொடங்கினும்
அத் தருணத்தில் கணபதியே உமைத்துதித்திட
ஈசுர விநாயகனே! கனிவாய் தமிழ் மக்கள் மகிழ்ந்திட
அற்புதமாய் அருள்புரிந்திடும் நீதியரசரே! ஈசுர விநாயகா!!
பட்ட துயர் யாவும் பொடிப் பொடியாய் ஓடிட
தொட்ட தொழில் யாவும் மேன்மேலும் துலங்கிட
திருவுடன் கல்வியும் சீரும் தழைத்திட
தமிழ் மக்கள் அனைவரும் நிம்மதியாய் வாழ்ந்திட
புத்தாண்டின் இனிய கணபதியே போற்றி!

பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை நாலும் கலந்து
உனக்கு நாம் தருவோம்-ஈசுர விநாயகா!
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ தமிழ் மக்களுக்கு
தீராத பிரச்சினையைத் தீர்த்துத் தா.

**என் இனிய நெஞ்சங்களே!**

இறைவன் மனிதனைச் சோதிப்பது தன்னைக் காட்டுவதற்காகவே. ஈசுர விநாயகரும் அடியேனைச் சோதித்துப் பார்க்கின்றார். நம்பிக்கை இழக்கின்றானா என்றும் நம்பிக்கை கூடுமேயொழியக் குறையாது. காரணம் தரிசனத்தில் அடியேனுக்குத் திறப்பைத் தந்தருளி விட்டார். அதனை நிஜயமாக உங்கள் எல்லோருக்கும் கிடைப்பதற்காகத்தான் போராடிக் கொண்டிருக்கின்றேன் விரைவாகத் தீர்த்துத் தரப் போகின்றார். "ஆக்கப் பொறுத்து விட்டோம் ஆறப்பொறுக்க வேண்டாமா?" ஒருவர் எங்களுக்கு உதவி செய்ய வருகின்றார் என்றால் அவரைப் பற்றிய பெருமைகளை மற்றவர்களுக்கு எடுத்துக் கூறி அவரை அறிமுகப்படுத்த வேண்டும். அப்போது தான் உதவி செய்ய வந்தவர் சந்தோஷமாகக் காரியங்களைச் செய்து தருவார். அது போல் அடியேனும் விநாயகரைப் பற்றிய அற்புதங்களை அறியத் தந்து கொண்டிருக்கின்றேன். நீங்கள் அறிந்தும் இருக்கலாம். அறியாமலும் இருக்கலாம். ஆனால் அறியத் தருவது எனது கடமை ஆகும்.

**ஆச்சரியம் ஆனால் அற்புதம்...**

நாகை மாவட்டம் நன்னிலம் வட்டத்தில் அமைந்துள்ள திருத்தலத்துக்குப் பெயர் "கணபதீச்சரம்" விநாயகர் கஜமுகா அசுரனை அழித்த ஊர் செங்காட்டான் குடி ஆகும். விநாயகர் கஜமுகா அசுரனை அழிக்க கஜமுகத்துடன் உருவெடுத்து இவ் ஊருக்கு வந்தாரெனவும் கஜமுகா அசுரனை அழிக்கும் போது அவன் செங்குருதி படிந்து ஊரே செங்காடாக மாறியதால் இவ்வூர் திருச்செங்காட்டான்குடி எனப்பெயர் பெற்றது என்பது வரலாறு என்ன ஆச்சரியம் கேட்கவே பயங்கரமாக இருக்கின்றது.

**பிள்ளையார்பட்டி பெயர் வரக் காரணம்**

ராஜராஜ சோழன் தஞ்சைப் பெருவுடையார் கோயில் அமைக்கும் போது விநாயகரைப் பிரதிஷ்டை செய்ய சேர நாட்டிலிருந்து சிலை எடுத்துவரும் சமயத்தில் வண்டியின் அச்சுமுறிந்து விநாயகர் சிலை இப்போது கோயில் உள்ள இடத்தில் கீழே விழுந்து விட்டதாகவும் அதன் பின் சிலையைத் தூக்க முடியவில்லை. எல்லோரும் திகைத்து நின்றனர். அன்றிரவு மன்னனின் கனவில் "நான் வரவேண்டிய இடத்திற்கு வந்து சேர்ந்து விட்டேன்" இவ்விடத்திலேயே எனக்குக் கோயில் எழுப்புங்கள் என்று விநாயகர் கூறியருளியதால் இங்கு கோயில் கட்டப்பட்டதாம். அன்று முதல் இவ் ஊர் பிள்ளையார் பட்டி என்று பெயரும் பெற்றது. "நடப்பவை யாவும் நன்மைக்கே"

**"கணபதி மஹால்" அரண்மனையின் பெயர்**

மகாராஷ்டிர மாநிலத்தில் தான் இந்தியாவிலேயே மிகச் சிறப்பாக விநாயகர் வழிபாடு நடைபெற்று வருகின்றது. "கணபதியப்பா" என்ற விநாயகரைப் போற்றி இங்கு விநாயகர் சதுர்த்தி வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுகின்றது. மகாராஷ்ட பேஷ்வாக்கள் விநாயகரைத் தங்கள் குல தெய்வமாக வழிபடுகின்றனர். அதனால் அவர்கள் தங்களது அரண்மனைக்கு "கணபதி மஹால்" என்று பெயரிட்டுள்ளனர். ஆவணிச் சதுர்த்தியில் விநாயகர் சிலையை "கணபதியப்பா மோரியா" என்று கோஷமிட்டுக் கொண்டு வீதி வீதியாகச் கொண்டு திரிந்து வணங்குவார்கள். வேழ முகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுத்து வரும்.

**மைல்கல் கணபதியின் உருவத்தில்...**

கிரேக்க நாட்டில் தொலைவின் அளவைக்கு குறிக்கும் மைல்கல் கணபதியின் உருவத்தில் அமைக்கப்பட்டுள்ளது. காரணம் பயணம் செல்லும் நீண்ட வழியில் கணபதி துணை வருவார் என்பது ஆகும்.

"நம்பிக்கை கொண்டோர்க்கு தும்பிக்கையான் துணை"

**ஓலமிட்ட விநாயகர்**

திருவையாறு கோயிலில் உள்ள பிள்ளையாருக்கு "ஓலமிட்ட விநாயகர்" என்று பெயர். ஒரு நாள் நள்ளிரவு ஆற்று வெள்ளம் கரை புரண்டு வர பிள்ளையார் ஓலமிட்டு தூங்கிக் கொண்டிருந்த ஊர் மக்களை எழுப்பி பாதுகாப்பான இடங்களுக்குப் போகச் செய்தார். கேட்க ஆச்சரியமாக இருக்கின்றது? பார்த்தீர்களா எப்படியெல்லாம் மக்களைக் காக்கின்றார்.

**நாயன்மார்கள் எல்லோரும் மனிதர்களா?**

சைவசமயத்தின் நீதியை நிலை நாட்ட மனிதருக்கு மனிதராகப் பிறந்து வாழ்ந்து காட்டிய தெய்வங்கள் ஆகும். அதாவது பல அற்புதங்களைச் செய்து சைவ சமயத்தை வியக்க வைத்தவர்கள். ஒன்றா? இரண்டா? 64 நாயன்மார்களும் வியக்கத்தக்க அற்புதங்களைச் செய்து வாழ்ந்து காட்டியவர்கள். சாதாரண மனிதர்களால் முடியாது. சமய குரவர்களை எடுத்துக் கொண்டால் அவர்களின் அற்புதங்கள் சொல்லி முடியாது. திருஞான சம்பந்தர் ஏடு தொடக்கும் மூன்று வயதிலே "தோடுடைய செவியன்" தேவாரத்தைப் பாடி தகப்பனுக்கே இறைவனை நேரடியாகக் காட்டியவர். மாற்ற முடியாத மருந்துகளால் பாண்டிய மன்னனின் வெப்பு நோயைத் திருநீற்றால் மாற்றியவர். இப்படி பல அற்புதங்கள்...

**திருநாவுக்கரசர்:** சுண்ணாம்பு அறையில் அடைத்த போது "மாசில் வீணையும்" தேவாரம் பாட சுண்ணாம்பு அறை தென்றலாக வீசி அவற்றைக் காப்பாற்றிது. கல்லோடு கட்டி கடலில் விட்ட போது "சொற்றுணை வேதியன்" தேவாரம் பாட கல் தெப்பமாக மிதந்து அவரைக் காப்பாற்றியது. இப்படிப் பல அற்புதங்கள்

**சுந்தரர்:** இறைவனே வந்து திருமணக்கோலத்தில் தடுத்தாட்கொண்டவர். உமக்குப் பித்துப் பிடித்து விட்டதா என்று சுந்தரர் கேட்டதால் "பித்தா பிறைசூடிப் பெருமானே" என்று பாடத் தொடங்கி பல தேவாரங்கள் பாடியவர். ஆற்றிலே இட்டு குளத்திலே எடுத்துக் காட்டியவர்.இப்படிப் பல அற்புதங்கள்.

**வாதவூரர்:** இறைவனை நினைத்து பல திருவாசகங்களைப் பாடியவர். நரிகளைக் குதிரைகளாக்கியவர். இன்னும் பல அற்புதங்களைச் செய்து காட்டியவர். "இறைவன் இருக்கின்றான்" என்று நிரூபித்துக் காட்டியவர்கள் நாயன்மார்கள். இவையெல்லாம் சாதாரண மனிதர்களால் முடியாது. எனவே இவர்கள் எல்லோரும் மனிதர்களாகப் பிறந்த தெய்வங்கள் என்பதை உணர்வோமாக.

**விநாயகர் விரதம் இருந்த குடும்பத்திற்கு நடந்தது என்ன?**

மனைவியோ கடவுள் பக்தி கணவனோ குடிப்பழக்கம். வீடோ வறுமை. மனைவி எப்போதும் விநாயகரை வணங்கிவிட்டுத்தான் காரியங்களைச் செய்யத்தொடங்குவார். விநாயகரின் விரதங்கள் ஒன்றும் தவறுவதில்லை. ஒருநாள் கணவன் குடித்து விட்டு வந்து என்னடி கும்பிடு கும்பிடு என்று கும்பிடுகிறாய். எங்கயடி உன்ர தெய்வம்? ஒண்டையும் காணேலையடி என்று பேசுவார். அதற்கு மனைவி நீங்களும் விரதம் இருக்க வேணும் என்று கூறுவார். எடியே குடுக்கிற தெய்வம் கூரையைப் பிச்சுக் கொண்டு கொடுக்குமடி என்று மனைவியைப் பேசுவார். ஒரு நாளைக்குத் தெய்வம் கொடுக்கத் தான் போகுது. நீங்களும் பார்க்கத்தான் போறியள் என்பார் மனைவி. அன்று இரவே கள்வர்கள் பக்கத்து வீட்டில் களவெடுத்துக் கொண்டு இருக்கும் வேளை அந்த வீட்டுக்காரர் காவல்துறைக்கு அறிவித்து விடுவார்கள். உடனே காவல்துறையினர் வந்து விடுவார்கள். கள்வர் ஒன்றும் செய்ய முடியாத நிலையில் எடுத்த நகைகளைப் பொட்டளமாகக் கட்டி பக்கத்து வீட்டுக் கூரையைப் பிய்த்து உள்ளே போட்டுவிட்டு ஓடி விடுவார்கள். விழந்ததும் கணவன் மனைவியிடம் இரவு வீட்டிற்குள் விழுந்து சத்தம் கேட்டது பார். எலி பிடிக்க வந்த பாம்பு விழுந்து விட்டது போல கவனமாகப் பார்த்துப் போ என்று கூறுவார். அங்கே மனைவி ஒரு பொட்டலம் இருப்பதைக் கண்டு ஆச்சரியத்தில் எடுத்துக் கணவனிடம் கொடுப்பார். அவர் அதை அவிட்டுப் பார்த்தால் கண்கொள்ளாக் காட்சி நகைகள் பளபளக்கின்றன. உடனே மனைவியை விழுந்து கும்பிட்டார் என்னை ஏன் கும்பிடுகிறீங்கள்? விநாயரைக் கும்பிடுங்க என்று மனைவி கூற. நீ விரதங்கள் இருந்து அவரை வணங்கியபடியால் தானே இது அவர் தந்தது என்று கூறி அன்றிலிருந்து அவரும் விநாயகரை நினைத்து விரதமிருக்கத் தொடங்கி விட்டார்.

இன்பேம சூழ்க! எல்லோரும் வாழ்க!!
பறாளாயில் பள்ளி கொண்டுள்ள சர்வ வல்லமை பொருந்திய
ஈசுர விநாயகர் திருப்பாதம் போற்றி! போற்றி!

**சோழியூரான் பிறைசூடிக்குரு**
**(ஆன்மீகவாதியும் ஓய்வு நிலை ஆசிரியரும்)**

(11.04.2025)

(3916)


# இராசிபலன்

**11.04.2025**
**பங்குனி 28, வெள்ளிக்கிழமை**
**சதுர்த்தசி பின்னிரவு 3.58 மணிவரை**
**உத்தரம் பிற்பகல் 4.02 மணிவரை**
**சுபநேரம் 6.06-7.36 மணிவரை**
**இராகுகாலம் 10.36-12.06 மணிவரை**
**பங்குனி உத்தரம், சித்தாமிர்தம்**
**சந்திராஷ்டமம்-அவிட்டம், சதயம்**


**வளவன்**



**மேஷம்**
தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், தேக நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், கௌரவமான நாள்.




**ரிஷபம்**
பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.




**மிதுனம்**
தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பயணங்களால் பலனுண்டு, நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.



**கடகம்**
புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




**சிம்மம்**
புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், வழிபாட்டில் ஆர்வம் கூடும்.




**கன்னி**
பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், புதிய அனுபவங்கள் ஏற்படலாம், தேக நலனில் அக்கறை கூடும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.



**துலாம்**
பணப்புழக்கம் அதிகமானாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம்பெறலாம், வழிபாட்டால் முன்னேற்றம் காண வேண்டிய நாள்.




**விருச்சிகம்**
வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், கௌரவமான நாள்.




**தனுசு**
பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், தொழில் வளர்ச்சி கூடும் நாள், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், குடும்ப ஒற்றுமை கூடும், போசன சுகமுண்டு.



**மகரம்**
வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்வீர்கள், குறை சொல்லியவர்கள் பாராட்டும் நாள், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும் பயணங்கள் கைகூடும்.



**கும்பம்**
குறைவாகப் பேசினாலும் குறை கூறிப் பேசாமல் இருப்பது நல்லது, குடும்ப பொறுப்புக்கள் கூடும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.



**மீனம்**
தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, சொந்த பந்தங்களின் வருகையால் சிந்தை மகிழ்வீர்கள்.

**முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வனவளத்திணைக்களத்தின் தான்தோன்றித்தனமான செயற்பாடுகளால் வடக்கின் அபிவிருத்தி பாதிக்கப்படும் அபாயம்

## வடக்கு ஆளுநர் விசனம்

(கொழும்பு)

**காடுகளை பாதுகாக்கின்றோம் என்ற பெயரில் வன வளத்திணைக்களம் மக்களின் காணிகளை அபகரிப்பது மற்றும் அபிவிருத்திக்கு தடையாக இருப்பதை நாங்கள் எதிர்க்கின்றோம் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.**



வடக்கு மாகாண ஆளுநரின் கோரிக்கைக்கு அமைவாக வடக்கு மாகாணத்தில் வனவளத்திணைக்களம் மற்றும் வனஉயிரிகள் திணைக்களம் என்பனவற்றால் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல் பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மிக நீண்டகாலப் போர் காரணமாக மக்கள் இடம் பெயர்ந்துள்ள நிலையில் அவர்களது காணிகள் ஆள் நடமாட்டம் அற்ற நிலையில் அவையே காடுகளாக வளர்ந்துள்ளன என்றும் அவற்றை கூகுள் வரைபடம் மூலமே வனவளத் திணைக்களம், வன உயிரிகள் திணைக்களம் என்பன தமக்குரியதாக அடையாளப்படுத்தி 2012 ஆம் ஆண்டின் பின்னர் அரசிதழ் வெளியிட்டுள்ளன.

2009ஆம் ஆண்டுக்கு முன்னர் அரசிதழ் வெளியிடப்பட்டவை தொடர்பில் எந்தக் குற்றச்சாட்டுக்களையும் முன்வைக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டிய ஆளுநர், போரின் பின்னர் கூகுள் வரைபடத்தை மாத்திரம் பயன்படுத்தி, கள அலுவலர்களுக்கும், பிரதேச செயலர், மாவட்டச் செயலர் ஆகியோருக்கும் தெரியாமலேயே அரசிதழ் வெளியிடப்பட்டுள்ளது என்றும் அதுவே தற்போதுள்ள சகல பிரச்சினைகளுக்கும் அடிப்படையாக அமைந்துள்ளது எனவும் தெளிவுபடுத்தினார்.

வனவளத் திணைக்களம் மற்றும் வனஉயிரிகள் திணைக்களம் என்பன தமக்குரியதாக 2012ஆம் ஆண்டுக்குப் பின்னர் வெளியிட்ட அரசிதழ்களில் குறிப்பிடப்படும் பகுதிக்குள் மக்கள் முன்னர் வாழ்ந்தமைக்கான கட்டடங்களின் எச்சங்கள், கிணறுகளின் எச்சங்கள், வயல்கள் செய்தமைக்கான அடையாளங்கள் என்பன இப்போதும் காணப்படுகின்றன என்றும் அவை மக்களின் வாழ்விட மற்றும் வாழ்வாதார நிலங்கள்தான் என்பனவற்றுக்கு இவை சிறந்த சான்று எனவும் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

வனவளத் திணைக்களம் மற்றும் வனஉயிரிகள் திணைக்களம் என்பன தான்தோன்றித்தனமாகச் செயற்படுவதால், மக்களின் வாழ்வாதாரம், குடியேற்றம் என்பன மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதுடன் வடக்கின் அபிவிருத்திச் செயற்பாடுகளும் திட்டமிட்ட ரீதியில் முடக்கப்படுவதற்கான அபாயம் காணப்படுகின்றது எனவும் குறிப்பிட்டார்.

இந்தப் பிரச்சினைகள் தொடர்பில் மிக நீண்ட காலமாக பேசப்பட்டு வந்தாலும் அதற்கு தீர்வு காணப்படாமல் இழுதடித்துச் செல்லப்படுகின்றது என விசனத்துடன் குறிப்பிட்ட ஆளுநர், மக்களின் காணிகளையும், அபிவிருத்திக்குத் தேவையான காணிகளையும் விடுவிப்பதே தீர்வாகும் எனப்தையும் அதனை உடனடியாகச் செய்யவேண்டும் என்றும் வலியுறுத்தினார். (6-8)

# விடுவிக்கப்பட்டது பலாலி வீதி பொங்கலிட்டு மக்கள் குதூகலம்







(யாழ்ப்பாணம்)

யாழ். வசாவிளான் சந்தி முதல் பொன்னாலை - பருத்தித்துறை வீதி வரையிலான பலாலி வீதி கட்டுப்பாடுகளுடன் 35 ஆண்டுகளுக்கு பின்னர் மக்கள் போக்குவரத்துக்காக நேற்று வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் அப்பகுதி மக்கள் வீதியில் தேங்காய் உடைத்து பொங்கல் பொங்கி தமது மகிழ்ச்சியினை வெளிப்படுத்தியுள்ளனர்.

யாழிலிருந்து இருந்து பலாலி வடக்கு பிரதேசத்திற்கு செல்லும் மக்கள் காங்கேசன்துறை சென்று அங்கிருந்தே பலாலி வடக்கிற்கு செல்லும் நிலைமை காணப்பட்டு வந்த நிலையில் குறித்த வீதியின் ஊடாக போக்குவரத்திற்கு அனுமதிக்குமாறு யுத்தம் நிறைவடைந்த காலம் முதல் சுமார் 15 வருட காலமாக மக்கள் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இந்நிலையில் குறித்த வீதி கட்டுப்பாடுகளுடன் திறந்து வைக்கப்பட்டுள்ள நிலையில், அப்பகுதியைச் சேர்ந்த மக்கள் சிலர் வீதியில் தேங்காய் உடைத்து , பொங்கல் பொங்கி தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8-33)



தேசிய மட்ட மாற்றுவலுவுள்ளோருக்கான போட்டியில் முதலிடம் பெற்ற கிளிநொச்சி மாவட்ட வீர, வீராங்கனைகளை கௌரவிக்கும் நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்றுக்காலை நடைபெற்றது. இந் நிகழ்வில் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளீதரன், மற்றும் பதவிநிலை உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், மாற்றுவலுவுள்ளோர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(படம்-தேவானந்தம் சிவசாந்தன்)

# சர்வதேச கிரிக்கெட் மைதானம் யாழ்ப்பாணத்தில் நிறுவுவதற்கு

## அமைச்சர் சுனில், ஜெயசூர்யா கள விஜயம்

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் சர்வதேச கிரிக்கெட் மைதானத்தை நிறுவுவதற்கான முயற்சிகளின் ஒரு பகுதியாக விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில் குமார கமகே மற்றும் இலங்கை கிரிக்கெட் ஜாம்பவான் சனத் ஜெயசூர்யா ஆகியோர் நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தனர்.

முன்மொழியப்பட்ட மைதானத்திற்காக ஏற்கனவே அடையாளம் காணப்பட்டு கையகப்படுத்தப்பட்டுள்ள மண்டைதீவில் உள்ள ஒரு நிலத்தை இருவரும் இதன் போது ஆய்வு செய்தனர்.

இதன்போது யாழ்ப்பாண பாதுகாப்புப் படைத் தளபதி மேஜர் ஜெனரல் ககன யஹமபத்தும் இந்தப் பயணத்தில் இணைந்து கொண்டார்.

இந்த விஜயத்தின் போது, அதிகாரிகள் அந்த இடத்தின் சாத்தியக்கூறுகளை மதிப்பீடு செய்து, வடக்குப் பிராந்தியத்தில் கிரிக்கெட்டை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட இந்த வசதியின் மேம்பாட்டுக்கான ஆரம்பத் திட்டங்கள் குறித்து விவாதித்தனர்.

இந்த முயற்சி வடக்கு மாகாணத்தில் இளைஞர்களுக்கு அதிக வாய்ப்புகளை வழங்கும் மற்றும் கிரிக்கெட் உட்கட்டமைப்பை மேம்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில் கமகே தெரிவித்தார்.


கடந்த மாதம் இந்திய உயர்ஸ்தானிகரிடமும் நான் ஒரு கோரிக்கையை வைத்தேன், இதேவேளை கடந்த வாரம் இந்தியப் பிரதமரிடமும் சனத்ஒரு கோரிக்கையை வைத்தார். இந் நிலையில் இலங்கை கிரிக்கெட்டும் இந்தத் திட்டத்திற்கு ஆதரவளிக்கும் என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். (6-8)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ரஷ்யாவுக்கு வாருங்கள் மோடிக்கு புடின் அழைப்பு



**(மொஸ்கோ)**

**இரண்டாம் உலகப்போரில் ரஷ்யா வெற்றி பெற்றதன் 80ஆவது ஆண்டு கொண்டாட்டத்தில் பங்கேற்க இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு ரஷ்ய ஜனாதிபதி புடின் அழைப்பு விடுத்துள்ளார்.**

சோவியத் யூனியன் - ஜேர்மனியின் நாஜி படைகள் இடையே கடந்த, 1941 - 1945 வரை போர் நடந்தது. இந்த இரண்டாம் உலகப் போரில், எவ்வித நிபந்தனையும் இன்றி நாஜி படைகள், சோவியத் யூனியனிடம் சரண் அடைந்தன. இந்த வெற்றியை ஆண்டுதோறும் மே 9 ஆம் திகதி ரஷ்யா கொண்டாடி வருகிறது.

இதன் 80ஆம் ஆண்டு வெற்றி விழா கொண்டாட்டம் அடுத்த மாதம் 9 ஆம் திகதி தலைநகர் மொஸ்கோவில் நடக்கவுள்ளது. இதில் பங்கேற்க நட்பு நாடுகளின் தலைவர்களுக்கு ரஷ்யா அழைப்பு விடுத்துள்ளது. அந்த வகையில், இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் அழைப்பு விடுத்துள்ளார்.

இதை ரஷ்ய வெளியுறவுத்துறை இணையமைச்சர் ஆண்ட்ரி ருடென்கோ நேற்று முன்தினம் உறுதி செய்தார். பிரதமர் மோடி கடந்த ஆண்டு ஜூலை மாதம் ரஷ்யா சென்றார். அப்போது புடினை இந்தியாவிற்கு வரும்படி அழைப்பு விடுத்தார்.

அதை புடின் ஏற்றுக் கொண்டார். இருப்பினும், அவரது வருகைக்கான திகதிகள் இன்னும் முடிவாகவில்லை. இந்நிலையில் அந்நாட்டின் வெற்றி விழா கொண்டாட்டத்தில் பங்கேற்க ரஷ்யா அழைப்பு விடுத்துள்ளது. ரஷ்யா - உக்ரைன் போரில் இந்தியாவின் நடுநிலையான செயற்பாட்டின் நடுவே மோடிக்கு இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (நி-8)

## முதியோர் இல்லத்தில் தீப்பரவல் 20 பேர் உயிரிழப்பு

### சீனாவில் துயரம்



(பீஜிங்)

வடக்கு சீனாவின் ஹெபே மாகாணத்தில் உள்ள லாங்குவா கவுண்டியில் உள்ள முதியோர் அடுக்குமாடி குடியிருப்பில் ஏற்பட்ட தீ விபத்தில் மொத்தம் 20 பேர் உயிரிழந்ததாக செய்திகள் வெளியாகியுள்ளன.

குறித்த முதியோர் இல்லத்தின் மீதமுள்ள முதியவர்கள் மேலதிக கண்காணிப்பு மற்றும் சிகிச்சைக்காக அருகிலுள்ள மருத்துவமனைகளுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

மீட்பு முயற்சிகள் மற்றும் பின்தொடர்தல் பணிகளை மேற்பார்வையிட ஹெபே மாகாண அரசு மற்றும் செங்டே நகராட்சி அரசாங்கத்தின் நிபுணர் குழுக்கள் சம்பவ இடத்திற்கு சென்றுள்ளன.

தீ விபத்துக்கான காரணம் தற்போது விசாரணையில் உள்ளது. தற்போது, அடுக்குமாடி குடியிருப்பின் பொறுப்பாளரான தொடர்புடைய நபரை உள்ளூர் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேலும்,விபத்துக்கான காரணம் குறித்த விசாரணை, பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு ஆறுதல் அளித்தல் மற்றும் பிற பணிகள் ஒழுங்கான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சீனா மத்திய தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.

தீ விபத்து தொடர்பான விசாரணைகளை மேற்பார்வையிட சீனாவின் மாநில கவுன்சிலின் பணி பாதுகாப்புக் குழு அறிவித்தது. (நி-8)



## போப் பிரான்சிஸை சந்தித்த பிரித்தானிய மன்னர் சார்லஸ்



(வத்திக்கான்)

கத்தோலிக்கத் திருச்சபைத் தலைவரான போப் பிரான்சிஸை பிரித்தானிய மன்னர் சார்லஸ் சந்தித்துள்ளார்.

கடந்த பெப்ரவரி மாதம் 14ஆம் திகதி மூச்சுக் குழாய் அழற்சி காரணமாக போப் பிரான்சிஸ் ரோம் நகரில் உள்ள ஜெமெல்லி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

அவருக்கு நுரையீரல் தொற்று மற்றும் சுவாச குழாய் பாதிப்பு போன்ற நோய்கள் இருந்துள்ளன.

கிட்டத்தட்ட ஒரு மாதத்திற்கும் மேலான சிகிச்சையின் பின்னர் வத்திக்கான் ஆலயத்திற்கு திரும்பிய போப் பிரான்சிஸ், அங்கு ஓய்வெடுத்து வருகின்றார்.

இந்நிலையில், இத்தாலியில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள மன்னர் சார்லஸ் மற்றும் அவரது மனைவி கமீலா

தம்பதியினர் போப் பிரான்சிஸை சந்தித்து அவரது உடல் நலம் குறித்து கலந்துரையாடியுள்ளனர். (நி-8)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 'கற்பகம்' பனைசார் விற்பனை நிலையம் திறப்பு




(சாவகச்சேரி)


யாழ்ப்பாணம் பிரதம தபால் நிலையத்தில் நேற்று வியாழக்கிழமை காலை கற்பகம் பனைசார் உற்பத்திகளின் விற்பனை நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட பிரதம தபாலகமும்-பனை அபிவிருத்திச்சபையும் இணைந்து முதற்தடவையாக இந்த செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளனர்.

மேற்படி திறப்புவிழா நிகழ்வில் அஞ்சல் தலைமையக அஞ்சல்மா அதிபர் பிறேமச்சந்திர ஹேரத், வடமாகாண அஞ்சல்மா அதிபர் திருமதி மதுமதி வசந்தகுமார், பனை அபிவிருத்திச்சபையின் தலைவர் வி.சகாதேவன், யாழ்.பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் அனுராதா பர்ணாந்து, யாழ்ப்பாணம் பிரதம தபாலதிபர் திருமதி சாந்தகுமாரி மற்றும் பனை அபிவிருத்திச்சபையின் சந்தைப்படுத்தல் முகாமையாளர் பா.சுதாகரன் உள்ளிட்டோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

அரச வளங்களை உச்ச அளவில் பயன்படுத்தும் புதிய அரசாங்கத்தின் கொள்கைக்கு அமைவாக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் மேற்படி திட்டம் ஊடாக சிறிய அளவிலான பனைசார் விற்பனை மற்றும் உற்பத்தியாளர்கள் நன்மையடைய முடிவதுடன் ஏற்றுமதியாளர்களுக்குத் தேவையான மாதிரிகளை உரிய தர நிர்ணயத்தோடு உடனடியாக பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6-8-30)

# உடையார்கட்டு காட்டுப்பகுதியில் 1700 காயா மரத்தடிகள் மீட்பு



(நெளுக்குளம்)

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட உடையார்கட்டு குளத்திற்கு பின்பாகவுள்ள காட்டு பகுதியில் காயா மரத்தடிகள் கடத்தல் முயற்சி புதுக்குடியிருப்பு பொலிஸாரால் முறியடிக்கப்பட்டுள்ளது.

உடையார்கட்டு காட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு மரத்தடிகள் வெட்டப்பட்டு கடத்தப்படுவதாக புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.பி.ஆர் ஹெரத்திற்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய மேற்கொண்ட நடவடிக்கையில் 1700 இற்கு மேற்பட்ட காயா மரத்தடிகள் வெட்டப்பட்டு ஏற்றுவதற்கு தயாராக காணப்பட்டது.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் பொலிஸ் உத்தியோகத்தர்களின் வருகையையடுத்து அங்கிருந்து தப்பியோடியுள்ளனர். இது குறித்த மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (6-8-299)

# பச்சிலைப்பள்ளி சபைக்கான தபால் மூல வாக்குச்சீட்டுக்கள் கையளிப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி - பச்சிலைப் பள்ளி பிரதேச சபைக்கான தபால் மூல வாக்கு சீட்டுக்கள் தபால் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி பிரதேச சபை சட்ட சிக்கல் நிலவுகின்ற நிலையில் பூநகரி பிரதேச சபைக்கான தபால் மூல வாக்கு சீட்டுக்கள் அஞ்சல் திணைக்களத்திடம் ஏற்கனவே கையளிக்கப்பட்டது.

இந்நிலையில் நேற்று பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கான தபால் மூல வாக்குச் சீட்டுக்கள் தபால் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டது.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்காக 370 பேர் தபால் மூலம் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8)

# கட்டைக்காட்டில் சட்டவிரோத மீன்பிடி-படகுகள் பறிமுதல்

(யாழ்ப்பாணம்)


வடமராட்சி கிழக்கு கடற் பகுதிகளில் சட்டவிரோத நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் நோக்கில் வெற்றிலைக்கேணி கடற்படையினர் தொடர் சுற்றிவளைப்புகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நடவடிக்கையின் ஒரு பகுதியாக நேற்று அதிகாலை கடற்படையினர் கட்டைக்காடு கடற்பகுதியில் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பில் சட்டவிரோதமாக ஒளிப்பாய்ச்சி மீன்பிடித்த படகுகள் மற்றும் இயந்திரங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டோர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் கட்டைக்காடு பகுதியை சேர்ந்தவர்கள் என்றும் விசாரணைகளின் பின் யாழ்ப்பாணம் நீரியல்வளத்திணைக்கள அதிகாரிகளிடம் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக ஒப்படைக்கப்படவுள்ளதாக கடற்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (6-8)

# பொது விளையாட்டு மைதான அபிவிருத்தி முன்னெடுக்கப்படும்

## தென்மராட்சி விஜயத்தில் அமைச்சர் சுனில்



(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரில் அமைந்துள்ள தென்மராட்சி பொது விளையாட்டு மைதானத்திற்கு நேற்று வியாழக்கிழமை பிற்பகல் விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில் குமார கமகே விஜயம் மேற்கொண்டு மைதான அபிவிருத்தி தொடர்பில் கவனம் செலுத்தியிருந்தார்.

தென்மராட்சிப் பொது விளையாட்டு மைதானம் நீண்ட காலமாக பயன்பாடு அற்றுக் காணப்படும் நிலையில் அது தொடர்பாக விளையாட்டுத்துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்ட நிலையிலேயே அமைச்சர் தனது யாழ் விஜயத்தின் போது வருகை தந்திருந்தார்.

இதன்போது சாவகச்சேரி நகரசபைச் செயலாளர், தென்மராட்சி அபிவிருத்திக் கழக பிரதிநிதிகள் கலந்து கொண்டு பொது மைதான அபிவிருத்தி தொடர்பாக அமைச்சரிடம் சில வேண்டுகோள்களை விடுத்திருந்தனர்.

இதன்போது மைதான அபிவிருத்திக்கு தேவையான ஏற்பாடுகளை முன்னெடுத்துத் தருவதாக அமைச்சர் உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8-30)


## வீதி பெயர்மாற்றம் பகிரங்க அறிவித்தல்

**வடக்கு எல்லை வீதியை 'சேர்மன் பொன்னையா வீதி' என பெயர்மாற்றம் செய்தல் தொடர்பான அறிவித்தல்**

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் நெல்லியடி நகரம் வட்டாரத்தில் (வட்டாரம் 08. நெல்லியடி (J/376) கிராமசேவையாளர் பிரிவில் அமைந்துள்ளதும் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் வீதிப்பதிவேட்டில் NJKVE615 இலக்க குறியீட்டில் **"வடக்கு எல்லை வீதி"** எனவும் வேறு பெயராக **'ஊரெல்லை வீதி'** எனவும் பதியப்பட்டுள்ளது. இவ்வீதியானது திருமகள் சோதி வீதியில் ஆரம்பித்து உடுப்பிட்டி வதிரி வீதியில் முடிவடைகின்றது.

வீதிப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ள வடக்கு எல்லை வீதியினை **"சேர்மன் பொன்னையா வீதி"** என பெயர்மாற்றம் செய்து தருமாறு குறித்த விண்ணப்ப கோரிக்கை கடிதத்தில் முதலாவதாக கையொப்பமிட்டவரான திரு ஐயாத்துரை கந்தசாமி, கேணியடி, ஆச்சிவளவு நெல்லியடி. என்பவரினாலும், 14 நபர்களின் பெயர்களைகொண்டு கையொப்பம் இடப்பட்டதுமான 03.03.2025ஆம் திகதி எழுத்து மூலம் கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இவர்களது கோரிக்கையின் பிரகாரம் வீதி பெயர்மாற்றுவதற்கு தங்களுக்கு ஆட்சேபனையெதுவும் இருப்பின் தங்களை தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி, தொலைபேசி இலக்கம், தங்கள் கையொப்பம் உள்ளிட்ட எழுத்து மூலமான ஆவணத்தின் பதிவுத் தபால் மட்டுமே ஏற்றக்கொள்ளப்பட்டு விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 14 நாட்களுக்குள் செயலாளர் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை எனும் முகவரிக்கு ஆட்சேபனையை அறியத்தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

எழுத்துமூலமாக 14 நாட்களுக்குள் ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காதுவிடின் குறித்த வீதியின் பெயரினை மாற்றுவதற்கு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனைத் இத்தால் தங்களுக்கு அறியத்தருகின்றேன். தங்களால் எழுத்து மூலமான ஆட்சேபனை தெரிவிக்கப்படின் உரிய கோரிக்கை ஏற்றுக்கொண்டு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும். ஆயினும் தங்களால் தெரிவிக்கப்படும் காரணங்களும் நியாயப்படுத்தல்களும் சான்றாதாரமாக இருப்பின் பரிசீலிக்கப்பட்டு பொருத்தமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**கணேசன் கம்ஸநாதன்,**
**செயலாளர்,**
**வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை.**

(2663)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்று தேரோட்டம்

(11.04.2025 இன்று வெள்ளிக்கிழமை)



நீர்வேலி வடக்கு
வெளித்தோட்டத் தெய்வம்
அருள்மிகு காளியம்மை உலாவரும்
தெய்வீகத் திருநாள்...!!



பாதிமதி சூடுமிறை பரமனொடு திருமாலும்
பங்கயத் தமர்ந்த பிரம்மாவும்
ஆதியிவள் மேலான சக்தியிவள் எனவியக்கும்
அலங்கார சிம்ம வாகினியாள்
சோதியாள் ஞான சொருபத்தாள் தாயாக
சொல்லவரும் சிற்பவெழில் தேரேறி
வீதியுலா வருகின்ற சிங்காரச் சிறப்பினையே
வியந்திங்கு பாடிடுவோம் வாரீர்..!
நீதியுள நீர்வேலி வடக்கின் வெளித்தோட்ட
நிகரிலாப் பெருமைசேர் இறைவி
மேதினியின் மேன்மைக் காளியம்மை இத்தினத்தில்
மேலான ரதமதிலே உலாவருதல்
நாதியே இல்லையென நாடியே வந்தோர்க்கு
நலமளிக்கும் வாழ்வுதனை வழங்கும்
ஓதியுணர் தெய்வத்திடம் உள்ளத்தால் இறைஞ்சிவிடு
ஒவ்வொன்றும் வெற்றியென அமைந்துவிடும்..!!
நீதிமொழி மந்திரமும் தேவாரப் பண்ணிசையும்
நிறைந்திடு பாமாலை சூட்டிடவே
வேதியரின் தீபத்தில் ஒளிர்கின்ற ஒளிச்சுடராய்
(3910) வேண்டும்வர மருளிடுவாள் உவந்து!

இரா.தில்லைராஜன்

# ஆசன முன்பதிவு இடைநிறுத்தம்

(கொழும்பு)

சித்திரை புத்தாண்டு காலப்பகுதியில் பேருந்து பயணிகளுக்காக ஆசனங்களை முன்பதிவு செய்யும் நடவடிக்கை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

பேருந்து பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு இந்த தீர்மானத்தை எடுத்துள்ளது.

அதனடிப்படையில் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை முன்பதிவு நடவடிக்கை இடைநிறுத்தப்படவுள்ளது.

இதனைத்தவிர பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மார்க்கத்தில் பேருந்துகள் தொடர்ச்சியாக பயணிக்க வேண்டியதும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

சாரதியொருவரின் கடமை நேரம் 14 மணித்தியாலங்களுக்கு மேற்படும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் மற்றுமொரு சாரதியை பணிக்கமர்த்த வேண்டும் என தேசிய போக்குவரத்து ஆணைக் குழு குறிப்பிட்டுள்ளது.

பயணிகள் போக்குவரத்து பேருந்துகளை விசேட சுற்றுலாப் பயணங்களுக்கு ஈடுபடுத்துவதும் புத்தாண்டு காலப்பகுதியில் தடை செய்யப்பட்டுள்ளது. (நி-8)

# பொலிஸ் சேவைக்கு அவசரமாக ஆட்சேர்ப்பு

## பாதுகாப்பு அமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

பொலிஸ் சேவையில் 2,500 பேரை அவசரமாக ஆட்சேர்ப்பு செய்வதற்கு அனுமதி கிடைத்துள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்த ஆட்சேர்ப்பு தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும் எனவும் எதிர்காலத்தில் ஆட்சேர்ப்பு தொடரும் எனவும் அவர் தெரிவித்தார்.

பொலிஸாரின் துன்புறுத்தல்களைக் குறைப்பதற்கான விசேட திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும், பொலிஸ் தொடர்பாக நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகள் குறித்து சட்டமா அதிபருடன் தொடர்ந்து கலந்துரையாடப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் பொலிஸாருக்கு தனியான சம்பளக் கட்டமைப்பை உருவாக்குவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார். (நி-8)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1992 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா:23 1/4
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: BSc, MBA, Cyber Security Engineer(pvt)
எதிர்பார்ப்பு : அரச/தனியார் உத்தியோகம்
தொ.இ: B/15316

பிறப்பு: 1997 இந்து
நட்சத் திரம்: உத்தராடம்
1 இல் செவ்
உயரம்: 5'10"
தகைமை/தொழில்: BSc,Executive Officer(pvt)
எதிர்பார்ப்பு: BSc Degree Holder. உயர்பதவி
தொ.இ: B/15317

பிறப்பு:1994 இந்து
நட்சத்திரம் : பூசம்
கி.பா: 58 1/2
8 இல் செவ்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: BSc,Teacher
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: B/15318

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு : 2000 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 22
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: BSC(final year)
எதிர்பார்ப்பு: பட்டதாரி,உத்தியோகம்
தொ.இ: G/15341

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: சதயம்
11 இல் சூரி செவ்
உயரம் : 5'6"
தகைமை/தொழில்: Dip in Early Children Education, Teacher(pvt)
எதிர்பார்ப் பு : தகுதியான ஆண்
தொ.இ: G/15352

பிறப்பு : 1985 இந்து
நட்சத்திரம்: அத்தம்
5 இல் சூரி செவ்
கி.பா: 23 1/2
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BSc(IT), Software Engineer
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: G/15353

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
# திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

**வியாபார முகாமைத்துவமாணிப் பட்டப்படிப்பு - 2023/2024**

Bachelor of Business Management Degree Programme - 2023/2024

**புதிய அனுமதிக்கான விண்ணப்பம் - 2025 - 15ம் அணி**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் நடாத்தப்படும் புதிய பாடத்திட்டத்தின் கீழ் அமைந்த மூன்று வருட கால வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறிக்கு புதிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அனுமதிக்கான தகைமைகள்**

- க.பொ.த. (உ/த) பரீட்சை - 2023 அல்லது அதற்கு முன்னர் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
- பொது அறிவுப் பரீட்சையில் ஆகக்குறைந்தது 30% ஆன புள்ளிகளைப் பெற்று பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றிருத்தல் வேண்டும்.
- பௌதீக விஞ்ஞானப்பிரிவு, உயிரியல் விஞ்ஞானப்பிரிவு, வணிகப்பிரிவு, கலைப்பிரிவு மற்றும் தொழினுட்பப்பிரிவு ஆகிய எப்பாடப் பிரிவினரும் விண்ணப்பிக்க முடியும்.

**முக்கிய குறிப்பு:** இலங்கைப் பல்கலைக்கழகமொன்றில் உள்வாரியாக பட்டப்படிப்பொன்றுக்காக பதிவு செய்தவர்கள் விண்ணப்பிக்கலாகாது.

**விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்தல்**

விண்ணப்பக் கட்டணமாக ரூபா **1,000.00** இனை **050152150001418** என்ற மக்கள் வங்கிக் கணக்கிலக்கத்தில் செலுத்தி **https://forms.gle/jF6iKwbaGciy1G4N8** எனும் இணைப்பின் ஊடாக விண்ணப்பித்துக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

**விண்ணப்ப முடிவுத்திகதி : 11.05.2025 (ஞாயிற்றுக்கிழமை) பின்னிரவு 11.59**
(விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை தரவிறக்கம் செய்து அதனுடன் கொடுப்பனவுச் சீட்டின் மூலப்பிரதியினை (Original Slip) இணைத்து **23.05.2025 (வெள்ளிக்கிழமை)** அல்லது அதற்கு முன்னர் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்திற்கு நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் (Registered Post) மூலமாகவோ அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் **"வியாபார முகாமைத்துவமாணிப் பட்டப்படிப்பு -2023/2024 - 15ம் அணி"** என தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

பதிவுத்தபால் அனுப்ப வேண்டிய முகவரி :

**சிரேஷ்ட உதவிப்பதிவாளர்,
திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.**

மேலதிக விபரங்களை 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணினூடாக அல்லது https://www.codl.jfn.ac.lk/ எனும் இணையத்தளத்தில் பெற்றுகொள்ளலாம்.

**பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.** (2661)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின்
# பொன்னியின் செல்வன் 745
## காவியத் தொடர் பாகம் -IV





இன்னும் கொடும்பாளூர்ப் பெரிய வேளான், இன்று சோழ நாட்டுக்குச் சனியனாக முளைத்திருக்கும் பழுவேட்டரையன், கடம்பூர் சம்புவரையன், இந்தத் திருமுனைப் பாடி நாட்டின் சிற்றரசனாக முனையதரையன், மழ நாட்டு மழவரையன், குன்றத்தூர்க் கிழான், வைதும்பராயன் முதலியவர்கள் தத்தம் படைகளுடன் இந்த இரண்டு நதிகளுக்கும் இடையில் தங்கியிருந்தார்கள்.

யானைப் படைகளும், குதிரைப் படைகளும் தெரிந்த கைக்கோளரின் மூன்று கைப் படைகளும் இங்கே முகாம் போட்டிருந்தன. இப்படித் தங்கியிருந்த படைகளுக்குள்ளே அடிக்கடி பயிற்சிப் போர்கள் நடக்கும். யானைகளோடு யானைகள் மோதும்போது பூகம்பம் வந்து விட்டதாகத் தோன்றும். குதிரைப் படைகளின் அணிவகுப்புகள் வேல் பிடித்த வீரர்களுடன் பாய்ந்து செல்லுங்கால் எழும் சத்தம் பிரளய கால சமுத்திரம் பொங்கிவருவது போலிருக்கும். வீரர்கள் வில்லுகளிலிருந்து அம்புகள் விட்டுப் பழகிக் கொள்ளும்போது அந்தச் சரமாரியினால் வானமே மறைந்துவிடும்.

எதிரிப் படைகளைத் தாக்குவதற்காக ஆயிரமாயிரம் வீரர்கள் 'நாவலோ நாவல்' என்று ஏககாலத்தில் கர்ஜித்துக் கொண்டு கிளம்பிப் பாயும் போது உலகத்தின் முடிவு நெருங்கி விட்டதாகவே தோன்றும். இதையெல்லாம் வேடிக்கை பார்ப்பதற்குத் திரள்திரளாக ஜனங்கள் வருவார்கள். இந்தத் திருமுனைப்பாடி நாட்டிலும் நடு நாட்டிலும் உள்ள ஜனங்கள் மிக நல்லவர்கள் அதோடு வீரம் மிகுந்தவர்கள். இங்கே படை திரண்டிருந்தபோது அவர்களுடைய விவசாயத்துக்குப் பெரும் குந்தகங்கள் நேர்ந்தன. அதையெல்லாம் அவர்கள் பொருட்படுத்தவில்லை. இத்தகைய மக்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதற்காகவே இராஜாதித்யர் இந்த இரண்டு நாட்டிலும் பல ஏரிகள் தோண்டுவித்தார். கொள்ளிடத்திலிருந்து புதிய ஆறு வெட்டிக் கொண்டு வந்து வீர நாராயணபுரத்து ஏரியில் நிரப்புவதற்கும் ஏற்பாடு செய்தார்.

ஆதித்தா! அந்த ஏரியின் வளத்தினால் பெருநன்மை அடைந்தவன் கடம்பூர் சம்புவரையன். அவன் அன்றைக்கு இராஜாதித்யரின் அடி பணிந்து நின்ற நிலையையும் இன்று அடைந்திருக்கும் செல்வச் செருக்கையும் ஒப்பிட்டுப் பார்த்தால் எனக்குப் பெரு வியப்பு உண்டாகிறது!

ஆதித்த கரிகாலன் குறுக்கிட்டு, "தாத்தா! சம்புவரையர் செருக்கைப் பற்றித் தங்களுக்கு என்ன கவலை? தக்கோலத்தில் நடந்த யுத்தத்தைப் பற்றிச் சொல்லுங்கள். இந்தக் கெடிலக் கரையில் திரட்டிய மாபெரும் சைனியம் எப்போது இங்கிருந்து புறப்பட்டது? அவ்வளவு முன் ஏற்பாடுகள் செய்திருந்தும், என் பெரிய பாட்டனார் அவ்வளவு பெரிய மகா வீரராக இருந்தும், ஏன் நம் படைகள் தக்கோலத்தில் தோல்வியுற்றன? தாங்களும் அந்தப் போரில் கலந்து போரிட்டவர் அல்லவா? ஆகையால் நேரில் பார்த்துத் தெரிந்து கொண்டிருப்பீர்களே?" என்றான். ஆம், நானும் அந்தப் போர்க்களத்தில் இருந்தேன். அதைப் பற்றித்தான் உனக்குச் சொல்லப்போகிறேன்.

"இராஜாதித்யர் இங்கே பல வகைப் படைகள் திரட்டித் தூர தேசங்களுக்குச் சென்று போர் செய்வதற்குப் பயிற்சி அளித்துக் கொண்டிருந்தார் அல்லவா? சில காரணங்களினால் உத்தேசித்திருந்த காலத்துக்குள் அவர் புறப்பட முடியவில்லை.

தொடரும்...)

# சிறுவர் அரங்கம்

## பாடம் கற்ற கரடி



ஒரு காட்டுக்குள் ஒரு பெரிய கரடி இருந்தது. அந்தக் கரடி மிகவும் சோம்பேறியாக இருந்தது. எப்போது பார்த்தாலும் சாப்பிட்டுவிட்டு தூங்குவதே வேலையாக இருந்தது.

அது வாழ்ந்துவந்த இடத்திற்கு அருகில் ஒரு எறும்புக் கூட்டம் வாழ்ந்து வந்தது.

கரடி சாப்பிடும்போது கீழேசிந்துகின்ற உணவுத் துணுக்குகளில் சிறிதளவைச் சாப்பிட்டு அந்த எறும்புக் கூட்டம் மீதியை சேமித்து வைக்கும்.

ஒருநாள் அந்த எறும்புகளின் தலைவன் அந்த சோம்பேறிக் கரடிக்கு பாடம் புகட்ட நினைத்தது.

அதனால் எல்லா எறும்புகளையும் கூட்டிக் கொண்டு போய் தூங்கிக் கொண்டு இருந்த கரடியைச் சுற்றி நின்று கொண்டிருந்தது.

ஒரு எறும்பு போய் கரடியைக் கடிக்கச் சொல்லியது. அந்த எறும்பும் தூங்கிக் கொண்டு இருந்த சோம்பேறிக் கரடியை கடித்தது. வலி தாங்காமல் தூக்கத்தில் இருந்த கரடிக்கு பகீர் என்று இருந்தது. என்ன இது எல்லா எறும்புகளும் என்னைச் சுற்றி நிற்கிறது என்று பயந்தது.

அப்போது தான் அந்த எறும்புகளினுடைய தலைவன் சொல்லியது இன்றைக்கு எங்களைத் தாண்டி நீ வெளியில் போக முடியாது. உன்னுடைய பொந்தில் இருந்து உணவ வேணும் என்றால் சாப்பிடு என்று சொல்லியது.ஆனால் உணவு [illegible] காத கரடிக்கு எதுவுமே அதனுடைய பொந்தில் இல்லை.

எவ்வளவு கெஞ்சியும் எறும்புகள் கரடிக்கு வழி விடவில்லை. அதனால அன்றைக்கு முழுவதும் பட்டினியாக இருந்தது கரடி.

அன்றைக்கு சாயந்திரம் பசியில் இருந்த கரடியிடம் அந்த எறும்புத் தலைவன் சொல்லியது. இன்றைக்கு எங்களால் நீ பட்டினி கிடந்ததற்கு எங்களை மன்னித்து விடு.

ஆனால் ஒரு விடயம் புரிந்துகொள் இதே மாதிரி உன் இருப்பிடத்தை விட்டு வெளிய போக முடியாத சூழல் வரலாம். அதுக்கு நீ தயாராக இருக்க வேண்டும். அதுக்காககத் தான் நாங்கள் இப்படி செய்தோம். நீ சாப்பிடுகின்ற சாப்பாட்டில் இருந்து கீழே விழுகின்ற துணுக்குகளைச் சாப்பிட்டுத் தான் நாங்கள் வாழ்கின்றோம். அந்த நன்றிக்காகத் தான் இப்படி நடந்து கொண்டோம் என்று சொல்லி மன்னிப்பு கேட்டது.

எறும்பு சொல்லிக்கொடுத்த பாடம் கரடியை நன்றாக மாற்றி விட்டது. அன்றில் இருந்து தனக்குத் தேவையான உணவை மட்டும் தேடா மல் சேமித்து வைப்பதற்கும் சுறுசுறுப்பாக உணவு தேடியது அந் தக் கரடி அப்படி அதற்கு கிடைக்கிற சாப்பாட்டைத் தான் உண்டது போக மீதியை சேமித்து வைக்க ஆரம்பித்தது கரடி.

மழைக்காலம் வந்து கரடி வெளியே போக முடியாத சூழல் வந்தது. அப்போது கூட அது சேமித்து வைத்திருந்த உணவைச் சாப்பிட்டு விட்டு நன்றாக இருந்தது.

உழைப்பு மற்றும் சேமிப்பைப் பற்றி தனக்கு நல்ல புத்தி சொன்ன எறும்புத் தலைவனுக்கு தினமும் நன்றி சொல்லியது அந்தக் கரடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்.
## செல்லத்துரை இராசமணி
(ஆசை)

**திதி : 11.04.2025**

உள்ளத்தில் உறைந்திருக்கும்
உங்கள் தெய்வீக குரல் ஓசை
இல்லத்தில் குலதெய்வமாய்
குடியிருக்கும் அம்மா...
வழிகாட்டி நின்ற தெய்வம்
வானுயர்ந்த தெய்வமாகி
வருடம் மூன்று அம்மா...
உங்கள் வழித்தடத்தில்
வாழ்ந்திடுவோம்
சாந்தியாய் உறங்கிடம்மா...

தோற்றம் **19.08.1947** மறைவு **09.04.2022**

ஆசையப்பர் கோவிலடி,
கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(1011)

# மதுபானசாலைகளுக்கு பூட்டு

(கொழும்பு)

புத்தாண்டு பண்டிகை காலத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து மதுபானசாலைகளும் மூன்று நாட்களுக்கு மூடப்படும் என கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி எதிர்வரும் 12, 13 மற்றும் 14 ஆகிய தினங்களில் அனைத்து கலால் அனுமதி பெற்ற மதுபானசாலைகளையும் மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (நி-8)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 500 | 400 | 350 | 450-500 | 600 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 180 | 150 | 200 |
| பச்சைமிளகாய் | 600 | 500 | 600 | 450 | 600 |
| தக்காளி | 450 | 300 | 400 | 350 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 280 | 250 | 250-300 | 200 |
| கோவா | 300 | 250 | 300 | 300 | 300 |
| கரட் | 650 | 450 | 500 | 450 | 500 |
| பூசணி | 200 | 200 | 160 | 200 | 200 |
| புடோல் | 200 | 200 | 250 | 220 | 350 |
| வாழைக்காய் | 150 | 80 | 100 | 80-100 | 150 |
| சின்ன வெங்காயம் | 200 | 100-300 | 250 | 150-250 | 350 |
| பெரிய வெங்காயம் | 160 | 180 | 150 | 150 | 180 |
| பாகற்காய் | 450 | 500 | 600 | 500 | 600 |
| வெண்டக்காய் | 350 | 300 | 250 | 300 | 400 |
| கருணைக் கிழங்கு | 200 | 400 | 250 | 250 | 300 |
| பயற்றங்காய் | 250 | 250 | 250 | 250 | 300 |
| லீக்ஸ் | 350 | 160 | 300 | 250 | 250 |
| பீற்றூட் | 400 | 400 | 400 | 400 | 450 |
| கறிமிளகாய் | 650 | 450 | 450 | 500 | 800 |
| முருங்கைக்காய் | 2500 | 2000 | 1600 | 1500-2300 | 2400 |
| போஞ்சி | 450 | 450 | 500 | 400 | 600 |
| கத்தரிதம்புள்ள | 450 | 400 | 300 | -- | 500 |
| கீரை - 1 பிடி | 120 | 100 | 150 | 100 | 120 |
| தேசிக்காய் | 200 | 80 | 200 | 100 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 220 | 250 | 150 | 150-240 | 200-250 |
| இராசவள்ளி | 600 | 800 | 500 | 600 | 600 |
| வெங்காயப்பூ | 250 | 350 | 300 | -- | 600 |
| முள்ளங்கி | 100 | 150 | 150 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 120 | 80 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 90 | 100 | 80 | 80 |
| ஈரப்பலா | 150 | -- | 100 | 100 | 250 |

# இன்று ஒரு தகவல் (355)



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## மருள் நீங்கிய மாசறு காட்சி!

ஒரு முனிவர் ஒரு மரத்தடியில் உட்கார்ந்திருந்தார். சும்மா உட்கார்ந்திருக்கவில்லை. ஒரு ஊசியிலே நூலைக் கோர்த்து தன் வேட்டியிலே இருந்த ஒரு கிழிசலைத் தைத்துக் கொண்டிருந்தார். கை தான் கடமையைச் செய்தது. மனது கடவுளை நினைத்தது.அந்த சமயத்திலே பார்வதியும் பரமசிவனும் ஆகாய விமானத்திலே காட்சி தந்தனர். மரத்தடியிலே ஒளிப்பிளம்பாக உட்கார்ந்திருந்தார் முனிவர்.

பார்வதி இதைக் கண்டதும் உடனே பரமசிவன் பக்கம் திரும்பினார். அங்கே மரத்தடியில் பார்த்தீர்களா? என்று கேட்டார்.பார்த்தேன் என்றார் அவர். பிறகென்ன அதைப் பார்த்ததற்குப் பிறகும் எப்படி சும்மா செல்வது. வாருங்கள் அங்கே போய் அவருக்கு ஏதாவது வரம் கொடுப்போம் என்றார்.

பரமசிவன் முகத்திலே புன்னகை. அவனைப் பற்றி லேசாக நினைத்து விடாதே! அவன் அந்த நிலையையெல்லாம் கடந்தவன். இப்போதைக்கு நாம் அவனிடம் போவது வீண் வேலை. அதனாலே வேண்டாம்! வா! நாம் நமது வழியிலே போவோம். என்றார்.

இருந்தாலும் பெண்கள் சொன்னால் சொன்னதுதானே பிடிவாதத்திலே விட்டுக்கொடுக்க மாட்டார்களே. அப்படி இருக்கும் போது அம்மை என்கின்ற மாயாசக்தி பரமசிவனை சும்மா விட்டுவிடுமா? கட்டாயப்படுத்தி ஆண்டவனை அழைத்துக் கொண்டு வந்தார். வழக்கமாக ஆண்கள் என்ன செய்வார்களோ அதையே செய்தார். அதாவது சொல்வதைச் சொல்லிப் பார்த்துவிட்டு வேறு வழியில்லை சரி வா! என்று கூடவே வந்துவிட்டார்.

இரண்டு பேரும் வந்து அந்த முனிவர் முன்னால் நின்று வணக்கம் சொன்னார்கள்.

முனிவர் நிமிர்ந்து பார்த்தார். அடடே! அம்மையும் அப்பனுமா வாருங்கள் என்றார். அன்பாக வரவேற்றார். தாகத்துடன் வந்திருப்பீர்கள் என்று சொல்லி மோர் கொடுத்து உபசரித்துவிட்டு அவர் பாட்டுக்கு துணிக் கிழிசலைத் தைக்க ஆரம்பித்தார். பரமசிவனும் பார்வதியும் கொஞ்ச நேரம் பொறுமையாக உட்கார்ந்திருந்து பார்த்தார்கள். அவர் நிமிர்ந்து பார்க்கவில்லை. சரி நாங்கள் புறப்படுவோம் என்று குரல் கொடுத்தார்கள்.மிகவும் சந்தோசம் போய்வாருங்கள் என்று குரல் கொடுத்தார் முனிவர். மறுபடியும் தைக்க ஆரம்பித்தார்.

பார்வதி பரமசிவன் பக்கம் திரும்பி கேளுங்கள் என்று கண்ணைக் காட்டினார். அவரும் அதைப் புரிந்து முனிவரைப் பார்த்து தவச்செல்வரே நாங்கள் ஒருவருக்கு காட்சி கொடுத்தால் ஏதாவது வரம் கொடுத்து விட்டு போவது தான் வழக்கம். உங்களுக்கு ஏதாவது வரம்... என்று இழுத்தார்.

முனிவர் சிரித்தார். வரமா உங்கள் தரிசனத்தை விடவா. அதெல்லாம் இந்தக் கட்டைக்கு ஒன்றும் வேண்டாம். நீங்கள் உங்கள் வழியைத் தொடருங்கள் என்றார். மறுபடியும் தைக்க ஆரம்பித்தார்.

இருந்தாலும் பரமசிவனும் பார்வதியும் விடுவதாக இல்லை. ஏதாவது வரம் கொடுக்காமல் நாங்கள் போக மாட்டோம் என்று பிடிவாதம் செய்ய ஆரம்பித்தார்கள்.பார்த்தார் முனிவர். சரி அப்படி கட்டாயம் வரம் கொடுத்தால் தான் போக வேண்டும் என்றால் இந்த ஊசிக்குப் பின்னால் இந்த நூல் போவதற்கு வரம் கொடுங்கள் என்றார்.

அவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. ஏற்கனவே இந்த ஊசிக்குப் பின்னால் தானே நூல் போய்க்கொண்டு இருக்கிறது. இதற்கு நாங்கள் எதற்கு வரம் கொடுக்க வேண்டும் என்று கேட்டார்கள்.

அதைத்தானே நானும் கேட்கிறேன். நான் ஒழுங்கு தவறாமல் நடந்து வந்தால் பலன் நியதிப்படி பின்னால் வரும். நீங்கள் எதற்கு வரம் கொடுக்க வேண்டும் என்றார் முனிவர். இதைக் கேட்டதும் பரமசிவனும் பார்வதியும் சிரித்துக்கொண்டு அவர்கள் வழியிலே சென்றார்கள்.இந்த முனிவர் எய்திய காட்சிக்குப் பெயர்தான் மருள் நீங்கி மாசறு காட்சி என்கிறார் நினைவுகலை ஏந்தால்- பதின்கவகர்- திருக்குறள் இராமையா.


முப்பது வயதிலே பார்வையை இழந்த இவர் முப்பால் ஒளியை துணையாய் கொண்டவர். நமது காலத்திலே வாழ்ந்தவர்.இருள் நீங்கிய இன்பம் பயக்கும் மருள் நீக்கி மாசறு காட்சியவர்க்கு குறளிலே வரும் மருள் நீங்கிய மாசறு காட்சி என்ன என்பதை விளக்கு வதற்கு இந்தக் கதையைச் சொல்லி இருக்கிறார்.

மனதைத் தூய்மைப்படுத்தத் தவறியவர் இறைவனை நம்பியும் பயனில்லை. இறைவனை நம்பாமல் இருந்தும் பயனில்லை. ஆக உண்டு என்பதும் இல்லை என்பது உள்ளம் தூய்மையாக இருக்கும் பட்சத்தில் ஒரு புள்ளியில் சென்று முடிகிறது என்கிறார் அவர்அதனாலே ஒருவர் ஆத்திகன் - நாத்திகன் என்பது முக்கியமில்லை. அவன் மனது தூய்மையாக உள்ளதா இல்லையா என்பதே முக்கியம்.

இது தான் இன்றைக்கு தகவல் என்று சொல்லி முடிக்கிற இந்த நேரத்திலே இதோ எதிரிலே ஒரு வானொலி நேயர் வந்து நிற்கிறார். என்ன விசயம் என்று விசாரித்தேன். எங்களுக்கு நீங்கள் ஒரு வரம் கொடுக்க வேண்டும் என்றார். என்ன வேண்டும் கேளுங்கள் என்றேன். அடிக்கடி புராணக் கதைகளாக சொல்லி நீங்கள் பொறுமையை சோதிக்காமல் இருக்க வேண்டும் என்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



பிறப்பு
1944 - 05 - 10

இறப்பு
2025 - 04 - 10

## ஆறுமுகம் சிவானந்தம்

**(ஓய்வுபெற்ற நீர்ப்பாசன உத்தியோகத்தர் - கிளிநொச்சி)**

அல்வாய் வடமேற்கு திக்கத்தினைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சிவானந்தம் அவர்கள் நேற்று 10.04.2025 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - மாணிக்கம் தம்பதிகளின் அன்புப் புதல்வனும் தங்கலட்சுமி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான திருமலர், ஜெயதீஸ்வரன் மற்றும் ரஞ்சிதமலர் ஆகியோரின் சகோதரனும் சதீஸ்குமார், ஜெயக்குமார், சசிகலா, காலஞ்சென்ற ராஜ்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் கோணேஸ்வரி, ஹம்சப்பிரகாஸ், மு.வசுமதி, பா.ஜனார்த்தனன், மாலினி, ரா.ஜனந்தினி ஆகியோரின் மாமனாரும் சிவானுஜன், நிலக்ஷா, டிசானி, சிவானி, ஷஜனன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 11.04.2025 வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில்(அல்வாய் வடமேற்கு திக்கம்) காலை 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திக்கம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அல்வாய் வடமேற்கு,
திக்கம்.

(C-2667)

தகவல் :குடும்பத்தினர்
076 112 4145

## ரணிலுக்கு...

பாராளுமன்றத்தில் நேற்றுப் பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை மீதான முதல் நாள் விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

அல்ஜசீரா நேர்காணலின் பின்னரே பட்டலந்த விடயம் பேசுபடுபொருளாக மாறியதாகக் கூறுகின்றனர். அப்படி ஒன்றும் இல்லை ஊழல்வாதிகளிடம் இருந்து நாட்டைக் காப்பாற்றவே எமது சகோதர, சகோதரிகள் உயிர்த்தியாகம் செய்தனர். இந்த நாட்டை மீட்கும் நோக்கமே இருந்தது.

சாதாரண பொது மக்களுக்கு நீதியை நிலைநாட்டக் கூடிய நாடாக எமது நாட்டை மாற்றவே முயற்சித்தோம்.

கடந்த 35 ஆண்டுகளாக சிறு ஆயுதங்கள் ஏனும் நாங்கள் கையில் எடுக்கவில்லை.

1994 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தேர்தலில் போட்டியிட்ட எமது 08 சகோதரர்களைக் கொலை செய்தனர்.

எனினும் நாங்கள் 'உண்டி வில்லை' ஏனும் கையில் எடுக்கவில்லை. பயத்தினால் அல்ல. ஆயுதத்தில் உள்ள பலம் தொடர்பில் எங்களுக்கு நன்கு தெரியும்.

அதனைக் கையில் எடுத்தால் மீண்டும் கீழே வைக்க முடியாது.

பிரதான கொலையாளிகளுக்குக் கட்டாயம் நீதிமன்றம் ஊடாக தண்டனை வழங்குவோம்.

வெளிநாடுகளில் உள்ள சிறந்த அதிகாரிகளையேனும் கொண்டு வந்து ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக சட்டரீதியான அனைத்து விசாரணைகளையும் மேற்கொண்டு அவர்களின் இறுதிக்காலத்திலேனும் கட்டாயம் நாங்கள் தண்டனையை வழங்க நடவடிக்கை எடுப்போம்.

அடுத்த விவாத நாளுக்கு முன்னர் இது தொடர்பான விசாரணைக் குழுவை ஜனாதிபதி நியமிப்பார்.

எமது மகன் வருவான் எனத் தினமும் இரவிரவாகக் கதவைத் திறந்து வைத்துக் காத்திருந்த வடக்கு, கிழக்கு, தெற்கில் வாழும் அனைத்து அம்மாக்களுக்கும் நாம் நீதியைப் பெற்றுக் கொடுப்போம் என்றார். (ம-4,7)


## மாவைக் கந்...

நாளான இன்று வெள்ளிக்கிழமை பக்திபூர்வமாக இடம்பெறவுள்ளது.

அதிகாலை பத்தாம் கால யாகபூஜையும் மகா பூர்ணாகுதி சமர்ப்பணமும் இடம்பெற்று காலை 7 மணியளவில் மகா தீபாராதனையைத் தொடர்ந்து கும்பங்கள் யாகசாலையிலிருந்து மூல ஆலயம் நோக்கி எழுந்தருளல் இடம் பெறும்.

காலை 8.07 மணி முதல் உள்ள சுப வேளையில் ராஜகோபுர அபிஷேகமும் காலை 9.36 மணி முதலான சுப வேளையில் ஸ்ரீ மஹாவல்லி ஸ்ரீ கஜவல்லி சமேதராய் வீற்றிருக்கும் மூலவருக்கும் விநாயகர் முதலான ஏனைய பரிவார தெய்வங்களுக்கும் மகா கும்பாபிஷேகம் இடம்பெறும். (ம-4,7)

# மரண அறிவித்தல்



பிறப்பு 18.05.1943

இறப்பு 07.04.2025

## சின்னையா மாணிக்கராஜா

கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் பழைய வீதி கோப்பாய் தெற்கு கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா மாணிக்கராஜா அவர்கள் (07.04.2025) திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சின்னையா - மகிழம்மா தம்பதியரின் மூத்த புதல்வனும், சின்னட்டி - பொன்னம்மா, தம்பன் - தங்கம் தம்பதியர்களின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற இராசமணி அவர்களின் அருமைக் கணவரும் பரமேஸ்வரி, மகேந்திரராஜா, புலேந்திரராஜா, சூரியகலா, சுதாகரன் ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற கந்தையா, முருகுப்பிள்ளை, கமலாதேவி, பாமதி, மஞ்சுளா, திருச்செல்வம், தங்கமலர் ஆகியோரின் மைத்துனரும் ஸ்ரீதரன், தயாளினி, தர்மினி, தர்சினி ஆகியோரின் அன்புமிக்க அப்பாவும் ஜெயவாணி, சிவகுமார், விக்னராஜா ஆகியோரது அன்பு மாமாவும் சிவானி, அனிஷ், அஸ்வின், ரனிசியா, மயூரிகா, மெலோனிகா ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.04.2025) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இருபாலை இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : பிள்ளைகள்
077 885 2786

(C-2668)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> தீயோரை ஒடுக்கி நீதியை நிலைநிறுத்த மறந்த தலைவனை வரலாறு நினைவிற்கொள்ளாது.
> – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம் சொல்லிய வண்ணம் செயல்

அறம், பொருள், இன்பம் என வகுத்த வள்ளுவன் மனித வாழ்வியலுக்குத் தேவையான அத்தனையையும் கூறிவைத்தான்.

திருக்குறள் எனும் பொய்யாமொழியைக் கற்றுணர்வதன் மூலம் மனித வாழ்வின் மகத்துவத்தை உணரவும் இந்த வையகத்தில் வாழ்வாங்கு வாழ்கின்ற நெறிமுறைகளை அறிந்து வாழவும் முடியும்.

எனவே எங்கள் தமிழ் மொழியில் இல்லாதது வேறு எந்த மொழியிலும் இல்லை என்று மார்தட்டிக் கூறுவதற்கு திருக்குறள் ஒன்று போதுமானது.

அந்தவகையில்,

*சொல்லுதல் யார்க்குமெ எளிய அரியவாம்*
*சொல்லிய வண்ணம் செயல்*

என்ற குறள்,

வாயால் கூறுவதென்பது மிகவும் சுலபமானது. அவ்வாறு வாயால் சொல்வதைச் செயலில் காட்டுவதுதான் முதன்மைக்குரியது.

எனினும் பலரும் சொல்லுகின்றனரே தவிர, அதனைச் செயலில் காட்டுவதாகத் தெரியவில்லை.

ஆம், தற்போதைய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க ஜனாதிபதித் தேர்தலின்போது கூறிய பிரசாரங்களும் பொதுத் தேர்தலின் போது தேசிய மக்கள் சக்தியினர் முன்வைத்த வாக்குறுதிகளும் மக்களை ஈர்த்தன.

நாட்டைச் சூறையாடுகின்ற கபோதிகளை வேரறுக்க வேண்டும் என்ற ஒரே நோக்கில் அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் வாக்களித்தனர்.

எனினும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இன்னமும் மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றவில்லை என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

ஆம், ஒரு திரைப்படத்தின் வெற்றி என்பது, திரைக்கதையின் வீச்சில் கதாநாயகன் வில்லனை எதிர்க்க வேண்டும். இங்குதான் திரைப்படத்தின் வெற்றியும் தோல்வியும் நிர்ணயிக்கப்படுகின்றன.

அதாவது வில்லன் அறத்தின் எதிரி. இதை இன்னும் ஒருபடி மேற்சென்று கூறுவதாயின், வில்லன் என்பான் நீதிக்கு எதிரானவன். அவன் செய்கின்ற அட்டூழியங்கள், கொடுமைகள் ஏதோவொரு வகையில் மக்களைக் கடுமையாகப் பாதிப்படையச் செய்திருக்கும்.

எனவே எப்போதும் அறத்தை – நீதியை விரும்புகின்ற மக்கள், எவ்வாறு வில்லனைத் தண்டிக்க வேண்டும் என்று எண்ணுகிறார்களோ அதற்கு ஏற்றாற்போல் கதாநாயகன் காரியத்தைச் செய்து முடிக்க வேண்டும். அதுவே திரைப்படத்தை வெற்றி பெறச் செய்யும்.

ஆக, இந்த நாட்டைச் சூறையாடியவர்களைக் கடுமையாகத் தண்டிக்க வேண்டும்.

முறையற்றுத் தேடிய அவர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்ய வேண்டும். அதிலும் வெளிநாடுகளில் வைத்துள்ள சொத்துக்களைக் கைப்பற்ற வேண்டும். இதுவே மக்களின் வேணவா. இதனைச் செய்யும்போது தான் மக்கள் ஆற்றுப்படுகின்றனர்.

எனினும் மக்களின் எதிர்பார்ப்பை இன்னமும் அநுர அரசு செய்யவில்லை. ஆம், இன்னும் அவை வெறும் சொற்களாகவே உள்ளன.

# வவுனியாவில் சங்கிலி அறுப்புகளின் பின்னணியில் இராணுவச் சிப்பாய்

## பொறிவைத்துப் பிடித்தனர் பொலிஸார்

வவுனியாவில் தனிமையில் சென்ற பெண்களின் சங்கிலிகளை அறுத்த குற்றச்சாட்டில் இராணுவச்சிப்பாய் ஒருவரை நேற்று வியாழக்கிழமை வவுனியா மாவட்டக் குற்ற விசாரணைப்பிரிவு பொலிஸார் கைது செய்தனர்.

வவுனியாவின் பல்வேறு பகுதிகளிலும் தொடர்ச்சியாக இடம்பெற்ற சங்கிலி அறுப்பு சம்பவம் தொடர்பில் வவுனியா மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் விஜய சோமமுனி அவர்களின் அறிவுறுத்தலின் கீழ், மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினர் மேற்கொண்ட துரித நடவடிக்கையின் போதே வவுனியா, ஈரப்பெரிய குளம் இராணுவ முகாமில் பணியாற்றும் குறித்த இராணுவ வீரர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட இராணுவ வீரர் மிகிந்தலையை சேர்ந்த 30 வயதுடையவர்என இனங்காணப்பட்டுள்ளார்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் வாயிலாக கடந்த டிசம்பர் 20 ஆம் திகதி ஓமந்தைப் பகுதியில் பெண் ஒருவரிடம் ஒரு பவுண் சங்கிலியும் கடந்த ஜனவரி முதலாம் திகதி வேப்பங்குளம், 6 ஆம் ஒழுங்கைப் பகுதியில் பெண் ஒருவரிடம் 2 பவுண் சங்கிலியும் கடந்த மார்ச் 31 ஆம் திகதி கூமாங்குளம் பகுதியில் பெண் ஒருவரிடம் ஒரு பவுண் சங்கிலியும் இம் மாதம் முதலாம் திகதி நெளுக்குளம் பகுதியில் பெண் ஒருவரிடம் ஒரு பவுண் சங்கிலியும் இராசேந்திரகுளம் பகுதியில் பெண் ஒருவரிடம் ஒரு பவுண் சங்கிலியும் அறுத்திருந்தமை தெரிய வந்துள்ளது.

அத்துடன் குறித்த நபர் சங்கிலி அறுப்பு சம்பவங்களுக்கு பயன்படுத்திய அவரது சொந்த மோட்டர் சைக்கிளும் மீட்கப்பட்டுள்ளதுடன் அறுக்கப்பட்ட சங்கிலிகளும் அடைவு வைத்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளின் பின் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

அண்மைக்காலமாக நாட்டில் இடம்பெறும் பல்வேறு குற்றச் சம்பவங்களுடனும் பாதுகாப்புத் தரப்பு தொடர்புபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-4,7)

# ஈஸ்டர் தாக்குதலுடன் பிள்ளையானுக்குத் தொடர்பு

## பகிரங்கப்படுத்தினார் ஆனந்த விஜேபால

2019 ஆம் ஆண்டு நாட்டை உலுக்கிய உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் பிள்ளையான் எனப்படும் சிவனேசதுரை சந்திரகாந்தன் தொடர்புபட்டுள்ளதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால நேற்றுப் பாராளுமன்றத்தில் பகிரங்கமாக அறிவித்தார்.

கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் பிள்ளையான் கிழக்குப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் காணாமல் ஆக்கப்பட்டமை 2006 ஆம் ஆண்டு இளைஞன் ஒருவர் கடத்தப்பட்ட சம்பவம் உள்ளிட்ட விசாரணைகளுக்காக பயங்கரவாதத் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுத்தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையிலே அமைச்சர் பாராளுமன்றத்தில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்துரைத்த அவர், உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் பிள்ளையானைத் தொடர்புபடுத்தும் குறிப்பிடத்தக்களவு தகவல்கள் தமக்கு கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் விரைவில் அவை வெளியிடப் படும் எனத்தெரிவித்தார். (ம-4,7)

# சிறுபோக நெற்செய்கை வவுனியாவில் ஆரம்பம்

*(வவுனியா)*

வவுனியாவில் 21 ஆயிரம் ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் க.விமலரூபன் தெரிவித்தார்.

இது குறித்து மேலும் கருத்துரைத்த அவர்,

பருவகால மழை, கடந்த வருட இறுதிகளில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் இவ்வருட ஆரம்பத்தில் பெய்த மழை காரணமாக வவுனியா மாவட்டத்தில் உள்ள அனைத்துக் குளங்களும் அவற்றின் நீர் கொள்ளளவினை எட்டியுள்ளது.

இதன் காரணமாக கடந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட சிறுபோக அளவினை விட இம்முறை ஐயாயிரம் ஏக்கர் அளவில் மேலதிகமாக சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

அதன்படி 21 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தற்போது சிறுபோக விதைப்பு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றது என்றார். (ம-4,7)

# "GovPay" ஊடாக அபராதம் செலுத்தல்

## பொலிஸார் பரிசீலனை

போக்குவரத்து விதிமீறல்களுக்காகப் பொலிஸாரினால் வழங்கப்படும் அபராதங்களை சாரதிகள் GovPay செயலி மூலம் செலுத்தக்கூடிய வகையிலான ஒரு முன்னோடித் திட்டத்தை அறிமுகப்படுத்த இலங்கை பொலிஸ் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தத் திட்டம் முதற்கட்டமாக குருநாகல் முதல் அநுராதபுரம் வரையான இடங்களில் செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி 7 ஆம் திகதி GovPay வசதி அறிமுகப்படுத்தப் பட்டநிலையில் இதனூடாக பொதுமக்கள் அனைத்து அரசாங்கக் கொடுப்பனவுகளையும் டிஜிட்டல் முறையில் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-4,7)

# வரி விதிக்காது நாடாள முடியாது

## ஆளுங்கட்சி எம்.பி நிமால்

*(கொழும்பு)*

வரிகளை விதிக்காது நாட்டை ஆட்சி செய்ய முடியாது எனத் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நிமால் பலிஹேன தெரிவித்துள்ளார்.

மேலும் முட்டைகள் மீதான வரி புதிதாகப் பிறப்பிக்கப்பட்ட வரி கிடையாது.

அரசாங்கத்திற்கு எதிராக மக்களை அணிதிரட்டும் முயற்சிகளில் ஈடுபடுவதனை சிலர் பழக்கமாகக் கொண்டுள்ளனர்.

நாட்டைக் கொண்டு நடாத்துவதற்கு அரசாங்கத்திற்கு வருமானம் தேவை. அதில் பெறுமதி சேர் வரி மிக முக்கியமானது.

மொத்த வரிகளில் மறைமுக வரி வருமானம் அதிகம். அதில் பெறுமதிசேர் வரி வருமானம் அதிகமானது எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அத்துடன் இணைய வழியில் வர்த்தகம் செய்யும் சிலர் வரி செலுத்துவதில்லை எனவும் அனைத்து தரப்பினரையும் உள்ளடக்கும் சமனிலையான வரி அறவீட்டு முறையொன்றை அறிமுகம் செய்ய வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார். (ம-4,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்றாட வாழ்வில் பிளாஸ்ரிக் பயன்பாடு, விளைவுகள் மற்றும் சுற்றுச்சூழல் ஆபத்துக்கள்

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்க A பிரிவு

பிளாஸ்ரிக் மாசுபாடு ஒரு முக்கியமான சுற்றுச்சூழல் நெருக்கடியாக உருவெடுத்துள்ளது. அதன் பரவலான இருப்பு சுற்றுச்சூழல் அமைப்புகள், வன விலங்குகள் மற்றும் மனித ஆரோக்கியத்தை பாதிக்கிறது. ஒரு காலத்தில் சாதகமாகக் கருதப்பட்ட பிளாஸ்ரிக்குகளின் நீடித்து உழைக்கும் தன்மை மற்றும் பல்துறை திறன், குப்பைக் கிடங்குகள், பெருங்கடல்கள் மற்றும் உயிரியல் அமைப்புகளுக்குள்ளும் கூட அவை குவிவதற்கு வழிவகுத்தது.

இந்த பன்முகத்தன்மை கொண்ட சிக்கலை நிவர்த்தி செய்வதற்கு பிளாஸ்ரிக் மாசுபாடு, மறுசுழற்சி தொழில்நுட்பங்களில் முன்னேற்றங்கள் மற்றும் பயனுள்ள முகாமைத்துவ உத்திகளை செயற்படுத்துதல் அவசியம்.

### பிளாஸ்ரிக் மாசுபடுத்திகளின் வகைகள்

பிளாஸ்ரிக்குகள் பரவலாக இரண்டு முக்கிய வகைகளாக வகைப்படுத்தப்படுகின்றன. தெர்மோபிளாஸ்ரிக்ஸ் மற்றும் தெர் மோசெட்டிங் பிளாஸ்ரிக்குகள் . ஒவ்வொன்றும் தனித்துவமான பண்புகள் மற்றும் பயன்பாடுகளைக் கொண்டுள்ளன.


தெர்மோபிளாஸ்ரிக்ஸ் என்பது பாலிமர்கள் ஆகும். அவை சூடாக்கும் போது மென்மையாகி, குளிர்விக்கும் போது கடினமாகின்றது. இந்த செயல்முறை மீளக்கூடியது. மற்றும் குறிப்பிடத்தக்க வேதியியல் மாற்றம் இல்லாமல் பல முறை மீண்டும் மீண்டும் செய்யப்படலாம். இந்தப் பண்பு தெர்மோபிளாஸ்ரிக்ஸை மறுவடிவமைத்து திறமையாக மறுசுழற்சி செய்ய அனுமதிக்கிறது.

பொதுவான எடுத்துக்காட்டுகளில் பொலிஎதிலீன், பொலி புரொப்பலீன், பொலிவைனல் குளோரைட்டு மற்றும் பொலிஸ்ரைரீன் ஆகியவை அடங்கும். இந்த பொருட்கள் அவற்றின் பல்துறைத்திறன் மற்றும் செயலாக்கத்தின் எளிமை காரணமாக பக்கேஜிங், கொள்கலன்கள், குழாய்கள் மற்றும் வீட்டுப் பொருட்கள் போன்ற தயாரிப்புகளில் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன.

தெர்மோசெட்டிங் பிளாஸ்ரிக்குகள் சூடாக்கப்பட்டு குளிரவிடப்படும் போது நிரந்தர வேதியியல் மாற்றத்திற்கு உட்படுகின்றன. இது ஒரு கடினமான, முப்பரிமாண வலையமைப்பை உருவாக்கும் வலுவான பங்கீட்டுவலுப் பிணைப்புகளை உருவாக்குகிறது.

ஒரு முறை அமைத்த பிறகு, இந்த பிளாஸ்ரிக்குகளை மீண்டும் உருக்கவோ அல்லது மறுவடிவமைக்கவோ முடியாது. இந்த உருகாத மற்றும் கரையாத தன்மை கட்டமைப்பு ஒருமைப்பாடு மிக முக்கியமான உயர் வெப்பநிலை பயன்பாடுகளுக்கு ஏற்றதாக அமைகிறது. தெர்மோசெட்டிங் பிளாஸ்ரிக்குகளின் எடுத்துக்காட்டுகளில் பீனோலிக் ரெசின்கள், எபொக்சி ரெசின்கள் மற்றும் நிரம்பாத பொலியஸ்டர்கள் ஆகியவை அடங்கும். அவை பொதுவாக மின் காவலிகள், ஒட்டும் தன்மையான பதார்த்தங்கள் மற்றும் கலவைப் பொருட்களில் காணப்படுகின்றன.

மறுசுழற்சி செய்யக்கூடிய தன்மை, வெப்ப நிலைத்தன்மை மற்றும் இயந்திர வலிமை



போன்ற காரணிகளைக் கருத்தில் கொண்டு, குறிப்பிட்ட பயன்பாடுகளுக்கு பொருத்தமான பொருளைத் தேர்ந்தெடுப்பதற்கு தெர்மோபிளாஸ்ரிக் மற்றும் தெர்மோசெட்டிங் பிளாஸ்ரிக்குகளுக்கு இடையிலான வேறுபாடுகளைப் புரிந்துகொள்வது அவசியம்.

### பிளாஸ்ரிக் மாசுபாடு

பிளாஸ்ரிக் பொருட்களின் பெருக்கம் குறிப்பிடத்தக்க சுற்றுச்சூழல் மாசுபாட்டிற்கு வழிவகுத்துள்ளது. பைகள், பிளாஸ்ரிக் உறிஞ்சிகள் மற்றும் பக்கேஜிங் பொருட்கள் போன்ற ஒற்றைப் பயன்பாட்டு பிளாஸ்ரிக்குகள் இந்தப் பிரச்சினைக்கு முக்கிய பங்களிப்பாகும். இந்தப் பொருட்கள் பெரும்பாலும் கழிவு மீள்சுழற்சி முகாமைத்துவ முறைமைகளிலிருந்து தப்பித்து, பரவலான மாசுபாட்டிற்கு வழி வகுக்கிறது.

மிக மெல்லிய பிளாஸ்ரிக்குகள் சிறிய துண்டுகளாக (மைக் ரோபிளாஸரிக்ஸ்) உடைகின்றன, அவை இயற்கையாக சிதைவடைவதில்லை. நூற்றுக் கணக்கான ஆண்டுகளாக சுற்றுச் சூழலில் நிலைத்திருக்கும். மெல்லிய பிளாஸரிக்குகள் குப்பையாக இருக்க அதிக வாய்ப்புள்ளது. மற்றும் அவற்றை சேகரித்து மீள்சுழற்சி செய்வது கடினமானது. தடித்த பிளாஸ்ரிக் பைகள் (50 மைக்ரான்களுக்கு மேல்) அதிக நீடித்து உழைக்கக் கூடியவை, மீண்டும் பயன் படுத்தக்கூடியவை மற்றும் மறுசுழற்சி செய்யக்கூடியவை.

பெரிய பொருட்களின் சிதைவு அல்லது நேரடி தொழில்துறை பயன்பாட்டின் விளைவாக உருவாகும் சிறிய பிளாஸ்ரிக் துகள்களான மைக்ரோபிளாஸ்ரிக் , பல்வேறு சுற்றுச்சூழல் அமைப்புகளில் ஊடுருவியுள்ளது.

மைக்ரோ பிளாஸ்ரிக்கள் பெருங்கடல்கள், ஆறுகள் மற்றும் நிலத்தடி நீரை மாசுபடுத்துகின்றன. நீர்வாழ் சுற்றுச்சூழல் அமைப்புகளை பாதிக்கின்றன. கழிவு நீர் தேக்கங்கள் மற்றும் பிளாஸ்ரிக் சிதைவுகள் தேங்குவதன் மூலம் அவை விவசாய மண்ணில் குவிந்து, மண் நுண்ணுயிரிகளை மாற்றுகின்றன. அவை காற்று மற்றும் மழைப்பொழிவு மூலம் பரவி, வளிமண்டல மாசுபாட்டிற்கு பங்களிக்கின்றன.

மீன், பிளாங்டன் மற்றும் பிற கடல் இனங்கள் மைக்ரோ பிளாஸ்ரிக்களை உட்கொள்கின்றன, இது உணவுச் சங்கிலியின் ஊடாக கடத்தப்பட்டு உயிர் அங்கிகளில் தேங்குவதற்கும் மற்றும் பெருக்கத்திற்கு வழி வகுக்கிறது. மைக்ரோ பிளாஸரிக்கள் பார உலோகங்கள் மற்றும் நீடித்து நிற்கக் கூடிய கரிம மாசுபடுத்திகள் (POPs ) போன்ற தீங்கு விளைவிக்கும் மாசுபடுத்திகளுக்கு காவிகளாக செயற்படுகின்றன. இது உயிரினங்களில் நச்சுத்தன்மையை அதிகரிக்கிறது. சுற்றுச்சூழல் அமைப்புகளில் மைக்ரோ பிளாஸ்ரிக் குவிவது வாழ்விடங்களை மாற்றும், இனங்கள் பன்முகத்தன்மை மற்றும் சுற்றுச்சூழல் சமநிலையை பாதிக்கும்.

மனிதர்கள் கடல் உணவுகள், குடிநீர் மற்றும் உப்பு மூலம் மைக்ரோ பிளாஸ்ரிக்களை உட்கொள்கிறார்கள். இது நீண்டகால சுகாதார அபாயங்களுக்கு வழிவகுக்கும்.

காற்றில் உள்ள மைக் ரோ பிளாஸ்ரிக்களை உள்ளிழுப்பது நுரையீரல் எரிச்சல் மற்றும் நாள்பட்ட சுவாச நோய்களை ஏற்படுத்தக்கூடும். சில மைக்ரோ பிளாஸ்ரிக்கள் பிஸ்பீனோல் ஏ (BPA) மற்றும் தலேட்டுகள் போன்ற ஹார்மோன், சீர்குலைக்கும் இரசாயனங்களை வெளியிடுகின்றன.

இது இனப்பெருக்க மற்றும் வளர்ச்சி ஆரோக்கியத்தை பாதிக்கிறது. நுண் பிளாஸ்ரிக் துகள்கள் மனித உயிரணுக்களில் அழற்சி தாக்கங்கள், ஒக்ஸிஜனேற்ற அழுத்தம் மற்றும் DNA சேதத்தைத் தூண்டும். இந்த துகள்கள் எங்கும் நிறைந்திருப்பது, பிளாஸ்டிக் மாசுபாட்டை அதன் மூலத்திலேயே நிவர்த்தி செய்வதன் அவசரத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

தொடரும்...

கலாநிதி. ஆ. மஞ்ஜீவன்,
சிரேஷ்ட விரிவுரையாளர்,
இரசாயனவியற்றுறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்த மருத்துவத்...

மீளக் கையளித்துள்ளனர்.

நவக்கிரி சித்த மருத்துவ மனைக்கு சொந்தமான 02 ஏக்கர் காணியையும் கடந்த 1996ஆம் ஆண்டு முதல் இராணுவத்தினர் கையகப்படுத்தி நிலை கொண்டிருந்தனர்.

அந்நிலையில் நேற்று வியாழக் கிழமை குறித்த காணியை மீளக் கையளித்துள்ளனர்.

சித்த மருத்துவமனைக்குத் தேவையான மூலிகைகளை பயிரிடும் காணியாக குறித்த காணி காணப்பட்ட நிலையில் 1996ஆம் ஆண்டு இராணுவத்தினர் காணியை கையகப்படுத்தி கடந்த 30 ஆண்டு காலமாக நிலை கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,4)

## அச்சுவேலி...

சுமார் 08 பரப்புக் காணி நேற்று வியாழக்கிழமை இராணுவத்தினரால் விடுக்கப்பட்டுள்ளது.

சுமார் 30 வருட காலத்திற்கு மேலாக இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருந்த குறித்த காணி மற்றும் அதனுள் இருந்த கட்டடம் என்பவற்றை வலி.கிழக்கு பிரதேச செயலரிடம் இராணுவத்தினர் நேற்று உத்தியோகபூர்வமாக கையளித்த நிலையில், பிரதேச செயலரினால் அச்சுவேலி பல நோக்கு கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் மாற்றிடம் ஒன்றில் தலைமைக் காரியாலயம் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.(ம-7,4,33)

## பலாலி வீதியூடாக...

திருந்த இராணுவத்தின் வீதித் தடையுடன் தமது சேவைகளை மட்டுப்படுத்திக்கொண்டிருந்தன.

தற்போது பாதை முழுமையாகத் திறக்கப்பட்டுள்ளமையால், இனி வரும் காலங்களில் யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்படும் 764ஆம் இலக்க வழித்தடப் பேருந்துகள் பலாலி வீதியூடாக பருத்தித்துறை - பொன்னாலை வீதியை சென்றடைந்து, அதனூடாக காங்கேசன்துறை சந்தி வரையில் சேவையில் ஈடுபடும் எனவும், அதன் மூலம் பலாலி வடக்கு, அந்தோணிபுரம், மயிலிட்டி மக்கள் குறித்த பேருந்து சேவை ஊடாக இலகுவாக யாழ்ப்பாண நகரப் பகுதிக்கு தமது பயணத்தினை மேற்கொள்ள முடியும் என தனியார் பேருந்து சேவையின் முன்னாள் தலைவர் அமிர்தலிங்கம் தெரிவித்தார். (ம-7,4,33)

## 24 மணி நேர...

15, 16, 17 ஆகிய திகதிகளில் இடைநிறுத்தப்படும் என குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேற்கூறிய தினங்களில் ஒரு நாள் மற்றும் பொதுச் சேவைகளை வழங்குவதற்கான டோக்கன் அட்டைகள் நண்பகல் 12 மணி வரை வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,4)

## 22 இந்திய...

காலாவதியான விசாக்களின் கீழ் நாட்டில் சட்டவிரோதமாக தங்கியிருந்த 22 இந்தியப் பிரஜைகள் நேற்று பிற்பகல் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் குழுவால் கைது செய்யப்பட்டனர்.

இராஜகிரிய பகுதியில் உள்ள ஒரு அலுவலக வளாகத்தில் இருந்த போது அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்த இந்தியர்கள் சுமார் 3 மாதங்களுக்கு முன்பு இந்த நாட்டிற்குப் பிரவேசித்துள்ளதுடன், அவர்களில் 17 பேர் சுற்றுலா விசாக்களில் வந்துள்ளனர்.

ஏனையவர்களில், 4 பேர் குடியிருப்பு விசாக்களின் கீழும், ஒருவர் வணிக விசாக்களின் கீழும் நாட்டிற்கு வந்துள்ளனர். (ம-7,4)

## பலாலி வீதி...

யாழ்ப்பாணம் வசாவிளான் சந்தி முதல் பொன்னாலை - பருத்தித் துறை வீதி வரையிலான பலாலி வீதி கடுமையான நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகளுடன் 35 ஆண்டுகளுக்குப் பின்னர் மக்கள் போக்குவரத்துக்காகத் திறந்து விடப்பட்டுள்ளது.

இராணுவ உயர்பாதுகாப்பு வலயத்தின் ஊடாகச் செல்லும் சுமார் 2.5 கிலோ மீற்றர் நீளமான குறித்த வீதியானது கடந்த 1990ஆம் ஆண்டு முதல் மக்கள் போக்குவரத்திற்குத் தடை செய்யப்பட்டிருந்தது.

அதனால் யாழ்ப்பாணத்தில் இருந்து பலாலி வடக்குப் பிரதேசத்திற்குச் செல்லும் மக்கள் காங்கேசன்துறை சென்று அங்கிருந்தே பலாலி வடக்குச் செல்லும் நிலைமை காணப்பட்டு வந்த நிலையில் குறித்த வீதியின் ஊடாகப் போக்குவரத்திற்கு அனுமதிக்குமாறு யுத்தம் நிறைவடைந்த காலம் முதல் சுமார் 15 வருட காலமாக மக்கள் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இந்நிலையில் குறித்த வீதியானது நேற்று வியாழக்கிழமை முதல் பல வேறு நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகளுடன் மக்கள் போக்குவரத்திற்காகத் திறந்து விடப்பட்டுள்ளது.

குறித்த வீதி ஊடாக காலை 06 மணி முதல் மாலை 05 மணி வரை மாத்திரமே மக்கள் பயணிக்க முடியும்.

வீதியில் பயணிப்பவர்கள் வீதியின் இடையில் வாகனத்தினை நிறுத்துதல், வாகனங்களைத் திருப்புதல், பயண நேரத்தில் புகைப்படம், காணொளி எடுத்தல், ஆகிய நடவடிக்கைகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மணித்தியாலத்துக்கு 40 கிலோமீற்றர் வேகத்தில் மாத்திரமே பயணிக்க வேண்டும். சாரதிகளுக்கான அடையாள ஆவணங்கள் கட்டாயம் வைத்திருக்க வேண்டும்.

இவ்வாறான கட்டுப்பாடுகளை மீறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனும் அறிவுறுத்தல் பதாகை வீதியில் தமிழ் மொழியில் எழுதிக் காட்சிப் படுத்தப்பட்டுள்ளது. (ம-7,4,33)

(மற்றொரு செய்தி உள்ளே)

## 35...

பட்டது.

இதன்போது உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பிறப்புச் சான்றிதழ்கள், சமாதான நீதவான்களின் சான்றளிப்பு மற்றும் அரசியலமைப்பின் 7வது அட்டவணையின் கீழ் எடுக்கப்பட்ட சத்தியப்பிரமாணம் ஆகியவற்றில் எழுந்த பிரச்சினைகள் காரணமாக நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்களை மீண்டும் ஏற்றுக் கொள்ளுமாறு மேல்முறையீட்டு நீதிமன்றம் நேற்று சம்பந்தப்பட்ட தேர்தல் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டது.

அதன்படி நிராகரிக்கப்பட்ட 35 வேட்புமனுக்களை மீண்டும் ஏற்றுக் கொள்ளவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பதில் நீதிபதி முகமது லாபர் தாஹிர் மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் அமர்வு, தொடர்புடைய வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டதற்கு எதிராக அரசியல் கட்சிகள் மற்றும் சுயாதீனக் குழுக்கள் தாக்கல் செய்த மனுக்களை விசாரித்த பின்னர் இந்த உத்தரவுகளைப் பிறப்பித்ததுள்ளது. (ம-7,4)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

### மஹஜன சம்பத
திகதி 2025.04.10
சீட்டிழுப்பு இலக்கம் 5802
M 1 8 3 3 4 1
அத சம்பத: M 3 3 4 1
சீட்டிழுப்பு இலக்கம் 377

### தன நிதானய
திகதி - 2025.04.10
சீட்டிழுப்பு இலக்கம் - 1832
P 41 45 70 75 P
Double Chance 26332

### மெகா பவர்
திகதி 2025.04.10
சீட்டிழுப்பு இலக்கம் 2160
N 14 | 12 27 33 43
ரூ. 1,000,000/- இலக்கம் 115307
ரூ. 100,000/- இலக்கம் 71285
ELECTRIC 0505934
தங்கக் காசு இலக்கங்கள்: 1671026, 0621946, 0347631, 0053298

### ஜய
திகதி 2025.04.10
சீட்டிழுப்பு இலக்கம் 070
S 1 7 6 9

### கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4044
சீட்டிழுப்பு திகதி 10.04.2025
R 02 08 24 61
R

### HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.04.10
சீட்டிழுப்பு இலக்கம் 1111
தனுசு 11 21 45 52 தனுசு
27

### உத்தியோகபூர்வ முடிவுகள்
10.04.2025
வெற்றி வாரம் 510
N
7 8 9 0 8 1
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.35,391,100.80
57796

### SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2776
சீட்டிழுப்பு திகதி 2025.04.10
தினம் வியாழக்கிழமை
14 27 49 62 J
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 56,019,949.60

### சனிதா
திகதி 10.04.2025
வெற்றி வாரம் 4937
05 19 28 70 F
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 60,313,912.40
ரூ.100,000/- பணப்பரிசு 64961

### சசிரி
வெற்றி வாரம் 661
சீட்டிழுப்பு திகதி 10.04.2025
வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 11 16 40
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 200,000.00

### ராசி
சீட்டிழுப்பு வாரம் 4488
சீட்டிழுப்பு திகதி 10.04.2025
தினம் வியாழக்கிழமை
06 07 44 45 சிம்மம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,593,197.60
151033

### கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
K 24 06 10 14 19
சீட்டிழுப்பு வாரம் 1952
10.04.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.571,912,889.80

### அத கோடிபதி
வியாழக்கிழமை
வெற்றி வாரம் : 2602
சீட்டிழுப்பு திகதி : 2025.04.10
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.56,653,376.80
11 15 33 35 R
702214

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் வடமராட்சி கரவெட்டி அல்வாய் கிழக்கில் 14 பரப்பு (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு.**

- 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் இருவழிப் பாதையுடன்
- ஒரு பரப்பின் விலை பிரதான வீதி முகப்புடன் பதினேழு இலட்சம் ரூபாய் (17.00 000/=). இரண்டாம் காணி (நடுப் பகுதி) பதினைந்து லட்சம் (15. 00 000/=). பின் பகுதிக் காணி எட்டு லட்சம் ரூபாய் (8.00 000/=)
- நெல்லியடி பஸ்நிலையம் 2 ½ Km. பருத்தித்துறை பஸ் நிலையம் 2 Km. மந்திகை ஆஸ்பத்திரி 1 Km. பருத்தித்துறை வீதி 600m. மாலு சந்தி 1 Km தூரம்.
- தம்பசிட்டி மெதடிஸ்த மிசன் வித்தியாலயம் 1 Km தூரம். மாலு சந்தி பிள்ளையார் கோயில் 1 Km தூரம்.
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி. செம்மண் தரை. நன்னீர் ஊற்று
- கரவெட்டிப் பிரதேச சபை 1Km தூரம்
- தரகர் தேவையில்லை.

(பார்வையிடும் நேரம் காலை 8.00 – மாலை 6.00 மணி வரை)

தொடர்புகளுக்கு:

**076 860 2770, 076 987 8617**
**076 935 3971**

(3920)

## காங்கேசன்துறையில் காணி விற்பனைக்கு

K.K.S Road முகப்பாகக் கொண்ட 19 பேச் காணி 54 பேச் காணி விற்பனைக்கு உண்டு.
K.K.S துறைமுகத்தில் இருந்து 500m தூரத்தில் நடேஸ்வரா கல்லூரிக்கு முகப்பாக உள்ளது.
விலை ஒரு பேச் 1.2 மில்லியன்

**T.P : 077 767 6169**

(3849)


## ஒருவர் கைது

(கட்டுநாயக்க)

சட்டவிரோதமாகக் கொண்டு வரப்பட்ட ஒன்றரை மில்லியன் ரூபா பெறுமதியான பொருட்களுடன் சந்தேகநபர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் கொழும்பு - குணசிங்கபுர பகுதியைச் சேர்ந்த 43 வயதுடையவராவார்.

(ம-7,4)


## Pearson International College



- இலங்கையில் முதன்முறையாக TESL தகைமையுடைய கனடா விரிரையாளர்கள் வழங்கும் கனடா அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட IELTS மற்றும் Diploma கற்கை நெறிகள்.
- கற்பித்தல் உங்களுக்கு திருப்திகரமானதாக இல்லையெனில் 100% money back Guarantee
- எம்மிடம் கல்வி கற்று Band 7 க்கு மேல் பெற்ற மாணவர்களின் பெறுபேறுகளை பார்த்து உறுதி செய்யுங்கள்.
- இப்போது யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவில் வட மாகாணத்தில் No. 1 IELTS Coaching

**074 188 7878, 074 385 7584**
**www.picsl.lk**

TESL CANADA

TESL Ontario

(1009)

## நிரு ரியூசன் சென்ரர் கோண்டாவில்

**A/L - 2027**

கலை, வர்த்தகம் : சனி 8.30
கணித, விஞ்ஞானம் : சனி 9.00

புதிய அனுமதிகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

(C-2656)

## DCM - யாழ். நகர்

வேம்படி மகளிர் கல்லூரி அருகாமை

**A/L 2027**

கலை, வர்த்தகப் புதிய பிரிவு
ஆரம்பம் – 12.04.2025 நாளை (சனி) 8.00 Am

நிர்வாகம் : 077 778 9815

அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(3911)

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

**V2 TRAVELS**

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

(C-2665)

## Village Hotel

**Bus Booking (A/C Bus)**

பருத்தித்துறை → கொழும்பு
யாழ்ப்பாணம் → கொழும்பு

இரு வழிச் சேவை (பகல்/ இரவு)
நெல்லியடி→கொடிகாமம் ஊடாக

www.villagehotel.lk

**077 544 8503**

(3825)


## ஞாபகார்த்த ஆராதனை



கடந்த 11.03.2025 செவ்வாய்க்கிழமை அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்த எங்கள் மகள்

### அமரர் ஸ்ரீரங்கநாதன் சுகன்ஜா

அவர்களின் ஞாபகார்த்த ஆராதனை நாளை 12.04.2025 சனிக்கிழமையன்று முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து ஆராதனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.


(C-2669)

செல்வம் மில் வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

தகவல் :
குடும்பத்தினர்

## 1 ஆம் ஆண்டு 13 ஆம் ஆண்டு

# நினைவஞ்சலி



**அமரர் வேலுப்பிள்ளை கந்தையா சண்முகலிங்கம்**
(முன்னாள் வடமாகாண துடுப்பாட்டப் பயிற்றுனர் – ஸ்ரீலங்கா கிரிக்கெட்)
தோற்றம்: 1946.10.24 மறைவு : 2024.03.23



**அமரர் லலிதா சண்முகலிங்கம்**
(ஓய்வுபெற்ற உப அதிபர்)
தோற்றம்: 1950.05.15 மறைவு : 2012.03.14

சண்னே... லிங்கமே... சண்முகலிங்கமே...லலியே.. தாயே லலிதாவே..

உங்கள் வாழ்க்கைப் பயணத்தைக் கொண்டாடுகின்றோம். இப்போது நீங்கள் எங்களோடு இல்லையென்றாலும், உங்கள் நினைவுகள் எப்போதும் எங்கள் மனங்களில் அழியாமல் வாழ்ந்துகொண்டு இருக்கின்றன. உங்களைப் போல பெற்றோர் கிடைக்க நாம் கொடுத்து வைத்தவர்கள். உங்கள் பிள்ளைகளாகப் பிறந்ததற்குப் பெருமைப்படுகின்றோம்.

எப்போதும் நிழலாய் நின்று எங்களை நெறிப்படுத்திய, உங்களின் எல்லா உழைப்புக்கும், அன்புக்கும், தியாகங்களுக்கும் எங்கள் இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நீங்கள் எப்போதும் சத்தியமாகவும், நேர்மையாகவும் வாழ்ந்தீர்கள். கஷ்டம் வந்தாலும் அதைத் தைரியமாக எதிர்கொண்டு, எதையும் நம்பிக்கையோடும், பொறுமையோடும் தீர்த்து வைத்தீர்கள். அதுதான் எங்களுக்கு வாழ்க்கையின் உண்மையான அர்த்தம் என்ன என்பதை உணர்த்தியது.

அப்பா ஒரு சிறந்த கிரிக்கெட் பயிற்சியாளராக, பல திறமையான வீரர்களை உருவாக்கியவர், விளையாட்டுக்காக வாழ்க்கையை அர்ப்பணித்தவர். தந்தையாய், நண்பனாய், குருவாய் எனப் பல பரிணாமம் கொண்டவர். சண் அண்ணா, சண் அங்கிள், சண் சேர் எனப் பல உறவுகள் கண்டவர்.

அம்மா அன்பின் இலக்கணம், பண்பின் உறைவிடம். அர்ப்பணிப்புடன் பணியாற்றிய ஆளுமைமிக்க ஆங்கில ஆசிரியை. சமூக சேவையிலும் தீவிர ஈடுபாடுடன் செயற்பட்டவர். இவர்கள் இருவரும் சமூகத்திற்குச் செய்த பங்களிப்புகள் என்றும் மனங்களில் நிலைத்து நிற்கும்.எங்கள் வாழ்வின் அடித்தளமாக இருந்த இவர்களின் நல்வாழ்வையும், இறையருளாலான பயணத்தையும் இன்று நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

உம் கனவுகளைச் சுமந்து உம் சுவடுகளைத் தொடர்ந்து
நம் பயணம் தொடர்கிறது எம் நாட்கள் நகர்கிறது
சொல்லித்தந்த கலைகள் நீர் சொல்லாத வலிகள்
அத்தனைக்கும் நன்றி.
ஆண்டவன் சந்நிதியில் ஆறுதல் கொள்ளுங்கள்!!
ஓம் சாந்தி!!! ஓம் சாந்தி!!! ஓம் சாந்தி!!!

(C-2664)

125, திருமகள் வீதி,
அரியாலை.

குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தால் இல. 191 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.04.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org